திராவிடநாடு

தேர்தலில் நாம்

சி. என். ஏ.

[சென்ற வாரத் தொடர்ச்சி]

வடக்கே ஏற்படுகின்ற அபாயங்களைக் கண்டு மனம் பதைக்கின்றவருக்கு நம்முடைய மக்கள் இவ்வளவு பேர் சாகின்றார்கள் என்றால் 'ஏன்?'' என்று கேட்பதற்கு நெஞ்சத்திலே அன்பு எழவில்லை என்றால், என்ன பொருள் அதற்கு, அவர் வேறு நாம் வேறு என்பது தவிர? அவர் வேறு நாட்டுக்காரர்; நாம் வேறு நாட்டுக்காரர் என்பது தவிர? புல்கானின் எப்படி வரவில்லையோ அப்படித்தான் நேரு இங்கே வரவில்லை. தலாய்லாமா எப்படி வரவில்லையோ அப்படித்தான் அவரும் இங்கே வரவில்லை. ஐசனோவர் எப்படி வரவில்லையோ அப்படித்தான் அவரும் இங்கே வரவில்லை.

ஐசனோவர் எப்படி அநுதாபச் செய்தி அனுப்பினாரோ அப்படித்தான் அவரும் அநுதாபச் செய்தி அனுப்பினார்.

தலாய் லாமா எப்படி 1000 ரூபாய் நன்கொடை கொடுப்பாரோ அப்படித்தான் அவர் கொஞ்சம் பணம் கொடுத்தார்.

சவுதி அரேபியா மன்னர் இருந்தால் எவ்வளவு பணம் தருவாரோ அதிலே பத்திலே ஒருபாகம் இவர் கொடுத்திருக்கிறார். இவ்வளவுதான் அவரால் முடிந்ததே தவிர, நம்மவரானால் அரியலூருக்கு வந்திருப்பார், வந்திருப்பது மட்டுமல்ல, நம்முடைய குடும்பத்தார் யாராவது இருக்கிறார்களா என்று கிளறிக் கிளறிப் பார்த்திருப்பார், தன்னுடைய உற்றார் உறவினர் யாராவது செத்துவிட்டார்களா என்று துக்கம் விசாரித்திருப்பார். அந்தப் பிணக் குவியலைப் பார்த்தவுடன் 'என்னுடைய ஆட்சியிலா இப்படி ஏற்படவேண்டும்?'' என்று மாரடித்துக்கொண்டு மக்களைப் பறிகொடுத்த மாதாக்களைப்போல அழுதிருப்பார். என்ன செய்தார் பண்டித நேரு? என்ன செய்ய முடிந்தது பண்டித நேருவினால்? இதனாலே பண்டித நேருவைக் குறை சொல்லுகிறேன் என்று நீங்கள் கருதவேண்டாம். ஐந்து பிள்ளைகளைப் படைத்த ஒரு நண்பனை விசாரிப்பதற்கு வந்தானாம் ஒரு நண்பன். உனக்கு எவ்வளவு குழந்தைகள் என்றுகேட்டானாம். உள்ள குழந்தை ஐந்து என்றானாம். அந்த நேரத்திலே கூரை பற்றி எரிந்து கொண்டிருந்ததாம். 'உன்னுடைய பிள்ளைகளிலே நல்லவன் யார்?'' என்று கேட்டானாம் நண்பன். 'அதோ கூரையைக் கொளுத்துகிறானே அவன் தான் என்னுடைய பிள்ளைகளில் நல்லவன், நம்முடைய கூரைவரைகொளுத்துகிறான். மற்றவர்கள் ஊர்க் கூரை எல்லாம்கொளுத்துவார்கள் என்றானாம். அதைப்போல நமக்குக் கிடைத்த தலைவர்களிலேயே நல்லவர் பண்டித நேரு, அவருடைய நிலைமை இப்படி என்றால், மற்றவர்கள் வந்தால் நம்முடைய கதி என்ன என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆகையினாலேதான் தி. மு. க. இந்த நாட்டுக்கு உரிய கட்சி, இந்த நாட்டுக்குரிய தலைவர்களைத் தேடிக்கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு என்று சொல்லுகிறதே தவிர, தேர்தலில் போட்டியிட்டுப் பாருங்கள் என்று சொல்லவில்லை.

நம்முடைய மதிப்புக்குரிய அமைச்சர் பக்தவத்சலம், போகிற ஊரிலே எல்லாம் இரத்தினச் சுருக்கமாகப் பேசுகிறாராம். இப்போது இருக்கிற பிரச்சினை எல்லாம் ஒரே ஒரு பிரச்சினை, நீங்கள் நேருவை நம்பப்போகிறீர்களா? அண்ணாத்துரையை நம்பப்போகிறீர்களா? நேருவுக்குச் செல்வாக்கு அதிகமா? அண்ணாத்துரைக்குச் செல்வாக்கு அதிகமா? என்று அமைச்சர் மக்களைக் கேட்கிறாராம். அமைச்சர் அவ்வளவு கஷ்டப்படாமல் என்னையே கேட்டால் நானே சொல்லுவேன், என்னைவிட நேரு அவர்களுக்குச் செல்வாக்கு நிரம்ப இருக்கிறது. ஆனால் நான் பக்தவத்சலம் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன், நேருவினுடைய செல்வாக்கு வளர வேண்டிய அளவுக்கு வளர்ந்தாகிவிட்டது. அண்ணாத்துரையின் செல்வாக்கு வளர ஆரம்பித்திருக்கிறது. இதனையும் பக்தவத்சலம் அவர்களுக்கு நான் சொல்லுவேன், நேருவினுடைய வாழ்க்கை வரலாற்றில் கடைசி அத்தியாயம் எழுதப்பட்டுக்கொண்டு வரப்படுகிறது, அண்ணாத்துரையினுடைய வாழ்க்கை வரலாறு, முதல் அத்தியாயம் எழுதி, அது சரி இல்லை என்று அடித்துவிட்டு, இரண்டாவது அத்தியாயம் எழுதி அதிலே நாலுவரி கலைத்துவிட்டு, மூன்றாவது அத்தியாயம் எழுதி, அதிலே மூன்றுவரி எடுத்துவிடு, நான்கு வரி எடுத்துவிடு என்று பெரியார் இராமசாமி சொல்கிற அளவிலே இருக்கிறது.

ஆகையினாலே இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பய

னற்ற காரியம். கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்தையும், கட்டுவதற்காகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிற செங்கல்லையும், பார்த்து, 'அந்தக் கோபுரம் ஆகுமா இந்தச் செங்கல் என்று கேட்பவனை, புத்தி மட்டமானவன் என்று ஊரார் சொல்லுவார்கள், மந்திரி என்ற காரணத்தினாலே அவரை அப்படித் துச்சமாக நாம் கருத வேண்டாம். ஆழ்ந்து யோசியுங்கள் என்று மட்டும அமைச்சர் பெருமானுக்கு நான் சொல்லிக் கொள்ளுவேன்.

பண்டித நேரு அவர்களுக்குச் செல்வாக்கு அதிகம் தான் என்றாலும், செல்வாக்கு அதிகம் என்பதாலேயே அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளுவதென்பது அரசியல் தத்துவம் ஆகாது. அரசியல் தத்துவம் என்பது யாருக்கு நல்ல ஆற்றல் இருக்கிறதோ அவரைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால், வெள்ளைக்காரனை ஏன் ஓட்டினோம். வெள்ளைக்காரன் ஆற்றல் அற்றவன், அறிவில்லாதவன், உலகத்திலே செல்வாக்கு இல்லாதவன், ஏதும் செய்ய இயலாதவன் என்ற காரணத்தினாலா இந்த நாட்டை விட்டுப் போகச் சொன்னோம்! அதை நீங்கள் நம்முடைய வேலூரில் உள்ள பழைய காங்கிரஸ்காரர்களை எல்லாம் கேட்டுப் பாருங்கள். இந்தக் கோட்டை மைதானத்திலே கூட்டம்போட்டுக் கோடையிடிகளும் மற்றவர்களும், வந்திருக்கிற மக்கள் எல்லாம் குலை அறுந்து ஓடுகிற அளவுக்கு, மேசையைத் தட்டித் தட்டிப் பேசினார்களே, வெள்ளைக்கார ஆட்சி போக வேண்டும் என்று. என்ன காரணத்தாலே வெள்ளைக்காரனைப் போகச் சொன்னார்கள்? வெள்ளைக்காரனுக்கு ஆளத் தெரியவில்லை என்றா? வெள்ளைக்காரனுக்கு ஆற்றல் இல்லை; அறிவு இல்லை என்றா? வெள்ளைக்காரனுக்கு உலகத்தில்செல்வாக்கு இல்லை என்றா? அப்படி ஒன்றும் இல்லை. வெள்ளைக்காரனுக்கு அறிவு இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது. அவன்தான் முதன் முதலில் இரயிலைப் பார்க்கச் செய்தான் நம்மை. நமக்குத் தசரதன் காலத்திலே தபாலாபீஸ் இல்லை. இராமன் காலத்திலே இரயில் வண்டி பார்த்ததில்லை. அரிச்சந்திரன் காலத்திலே ஆகாய விமானத்திலே போனது இல்லை. மற்றும் இருந்த பெரியவர்கள் காலத்தில் எல்லாம் நம்முடைய நாட்டுக்குத் தேவையான எந்த வசதியும் இருந்தது இல்லை.

வெள்ளைக்காரன் காலத்திலே தான் வசதி கிடைத்தது. அவ்வளவு ஆற்றல் படைத்தவன், ஆனாலும், அறிவுமிகுந்தவன் ஆனாலும், அவன் அந்நியன், ஆகையினாலே வெளியேற வேண்டும என்ற ஒரே வாதத்தைத்தான் சொன்னோம. அதே காங்கிரஸ் தலைவர்களை நீங்கள் கேளுங்கள்:

அந்நியன் என்ற காரணத்தாலே வெள்ளைக்காரனை வெளியே போகச் சொன்னதுபோல், வடநாட்டுக்காரர்களும் அந்நியர்கள், ஆகையினாலே அவர்கள் ஆட்சியில் நாங்கள் இருக்கமாட்டோம், என்று எடுத்துச் சொல்வது எந்த வகையில் தப்புஎன்று கேளுங்கள். எந்த வகையிலே அது நியாயக் குறைவு என்று கேட்டுப் பாருங்கள்.

வடநாட்டுக்காரர்கள், வெள்ளைக்காரர்களைபபோல, அமெரிக்க நாட்டுக்காரர்களைப் போல, நமக்கு அந்நியர்கள் என்பதற்கு ஆயிரத்து எட்டு எடுத்துக்காட்டுகளை, நாங்கள் மேடை தவறாமல் தந்து வந்திருக்கிறோம். வெள்ளைக்காரன் நமக்கு எதனாலே அந்நியன். அவன் பேசினால் நமக்குப் புரியாது; நாம் பேசுவது அவனுக்குத் தெரியாது. நாம் பேசுவது தமிழ்; அவன் பேசுவதுஆங்கிலம், ஆகையினாலே அந்நியன் என்றோம். அதே அடையாளத்திலே நீங்கள் வடநாட்டுக்காரனைப் பார்த்தால், நாம் பேசுவது தமிழ், அவன் பேசுவது இந்தி, துன்முகி, அல்லது வங்காளி, பீகாரி, என்று ஏதாவது ஒருவகை மொழியாக இருக்கும். மொழியிலே நமக்கும் அவனுக்கும் ஒற்றுமை இல்லை. நாம் நாலு முழம் வேட்டி கட்டுகிறோம். அவன் பன்னிரண்டாரை கட்டுகிறான், நாம் முன்னாலே சொருகுவோம். அவன் பின்னாலே இழுத்துச் சொருகினால்தான் துணி நிற்கும். நாம் ஆறு கண்டால் குளிப்போம். அவன் ஆறு கண்டால் கன்னத்திலே போட்டுக்கொள்ளுவான். நாம் காடு கிடைத்தால் வேட்டைக்குச் செல்லுவோம். அவன்காடுகளைப் பார்த்தால், இங்குதான் இராமசந்திரன் சீதாபிராட்டியோடு போனார் என்று கருதி கன்னத்திலே போட்டுக் கொள்ளுவான். நாம் நாளைக்கு ஒரு தடவையாவது குளிப்பதுதான் உடலுக்கு ஆரோக்கியம் என்று கருதுவோம், அவன் கங்கைக்குப் போனாலும், காவேரிக்குபபோனாலும், இராமேஸ்வரத்திற்குப் போனாலும், போட்ட சட்டையைக் கழற்றாமல், இருக்கிற தண்ணீரை மொண்டு மேலே ஊற்றிக்கொண்டு, தானாக உலரட்டும் என்று விட்டுவிடுவான். கடைவீதியிலே நம்முடைய தோழர்கள் உட்கார்ந்து வியாபாரம் செய்வார்கள். வடநாட்டுக்காரனுக்கு நீங்கள் கடை கொடுத்துப்பார்த்தால் தெரியும். அவன் படுத்துக் கொண்டேதான் வியாபாரம் செய்வான். நம்முடைய கணக்கெல்லாம் இடப்புறம் இருந்து வலப்புறம் எழுதுவோம். அவனுடைய கணக்கெல்லாம் மேலே இருந்து கீழே எழுதுவான். நாம் அரிசிச் சாதம் சாப்பிடுவோம். அவன் கோதுமை உணவு சாப்பிடுவான். எதிலே நாமும் அவனும் ஒன்று? எதிலே நமக்கும் அவனுக்கும் பந்தம் ஒட்டிக்கொண்டு இருக்கிறது? வேலூரிலே இருக்கிற மாசிலாமணிச் செட்டியார் பார்த்து ஒரு கொக்கி மாட்டிவிடுகிறேன் என்கிறார். சிதாபதி பார்த்து நானும் ஒரு கொக்கி மாட்டுகிறேன் என்கிறார். இராமசாமி முதலியார் பார்த்து நான் அந்தக் கொக்கிக்குக் கொஞ்சம் பாலிஷ் போடுகிறேன் என்கிறார். மாணிக்கவேலர் பார்த்து கொக்கி அறுந்து விடாமல் நான் பக்கத்திலேயே இருந்து பார்த்துக் கொள்ளுகிறேன் என்கிறார். இவ்வளவுதானே தவிர,வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும்,வடநாட்டுக்காரர்களுக்கும் நமக்கும், எந்த வகையிலே ஒற்றுமை இருக்கிறது? எந்த வகையிலே பாசம் இருக்கிறது? எப்படி நாம் அனைவரும் ஒன்று என்று காங்கிரஸ்காரர்களைக்கேட்க விரும்புகிறேன்.

மொழியிலே வேறு வேறு; நடைநொடி பாவனைகளிலே வேறு; உணவு உடையிலே வேறு; உணர்ச்சியிலே வேறு. அரியலூர் சம்பவத்தை நீங்கள் எண்ணிக் கொண்டால், அவர்களுடைய உற்சாகம் வேறு, அவர்களுக்கு வருகிற வருத்தம், வாட்டம் வேறு. நமக்கு ஏற்படுகின்ற விபத்தின் போது நமக்குத்தான் வாட்டம் வருத்தம் வருகிறது. ஆகையினால் நண்பர்களே! இந்தத் தேர்தலில்,

நீங்கள் முதலில் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டியதெல்லாம், மற்றக் கட்சிக்காரர்களைப் போல், காங்கிரசைக் குறை சொல்லி, காங்கிரசைப் பழித்துப் பேசி, நேரு பண்டிதரைக் குறைவாகப் பேசி, அவர்கள் வேண்டாம் எங்களை உட்கார வையுங்கள் என்று நாங்கள் போட்டிக்கு அழைக்கிறோம், என்று நீங்கள் கருதாமல், அவர் எவ்வளவு பெரியவர் ஆனாலும், எவ்வளவு ஆற்றல் படைத்தவர் ஆனாலும், அவர் அந்நியர், வடநாட்டுக்காரர்; எனவே அவர் அங்கேயே இருக்கட்டும். நாம் இந்த நாட்டுக்காரர்கள் இந்த நாட்டுக்குச் சொந்தமான ஒரு கட்சியை இந்த நாட்டு மக்களாலே கண்காணிக்கக் கூடிய ஒரு கட்சியை, இந்த நாட்டுக்காரராலே திருத்தக்கூடிய ஒரு கட்சியை, இதிலே உள்ளவர்களை வெற்றி பெறச் செய்வோம் என்று நீங்கள் துணிந்து இந்தக் காரியத்திலே இறங்கவேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று, உங்களை நான் கேட்டுக்கொள்ளுவேன். மாசிலாமணிச் செட்டியார் இன்றைய தினம் இங்கே எம். எல். ஏ. யாக இருக்கிறார்— காங்கிரஸ் எம். எல். ஏ. யாக. அவர் ஏதாவது நீங்கள் எதிர்பார்க்கிற காரியத்தைச் செய்யத் தவறுகிறார் என்றால், நீங்கள் மாசிலாமணிச் செட்டியாரைக் கேட்கிறீர்கள், என்னய்யா செட்டியாரே, தேர்தல் காலத்திலே இன்னின்னது சொன்னீர்களே, செய்ய முடியவில்லையே என்று. மாசிலாமணிச் செட்டியார் சொல்லுகிறார், 'இருங்கள் நான் போய்க் காமராஜரைக் கேட்டுவிட்டு வருகிறேன்" என்று. காமராசரைப் போய் மாசிலாமணிச்செட்டியார் கேட்டதும், காமராசர் 'ஆகட்டும்' என்று சொல்லமுடியாது. 'வேண்டாம்' என்றும் சொல்ல முடியாது. "இருங்கள் நான் நேருவைக் கேட்டுச் சொல்லுகிறேன்" என்று அவர் சொல்லுவார். நேருவைப் போய் காமராசர் கேட்டதும், நேரு என்ன உத்தரவிடுகிறாரோ அது காமராசருக்குத் தபாலிலே கிடைத்து, அவர் அந்தத் தபாலை மாசிலாமணிச்செட்டியாரிடத்திலே காட்டி, மாசிலாமணிச் செட்டியார் உங்களிடத்திலே காட்டவேண்டும்.

இதை நீங்கள் எண்ணிப்பார்த்தால் இரண்டு தபால் பெட்டி இருப்பதைக்காணலாம். இடையிலே ஒரு ஜங்ஷன் இருப்பதைப் பார்க்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்கள் நம்முடைய சாரதி அவர்களையோ, அல்லது நாம் சொல்லுகிற யாராவது ஒரு தோழரையோ, தேர்தலிலே வெற்றி பெறச் செய்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நடக்கவேண்டும் என்று கருதுகிற காரியத்தை, சாரதியைப் பார்த்து, "என்னய்யா, தேர்தல் காலத்தில் அப்படி எல்லாம் சொன்னீர்கள், இந்தக் காரியத்தை நடத்தவில்லையே" என்று கேட்டால், சாரதி சுருக்கமாகச் சொல்லலாம் "எங்களுடைய தலைமைக் கழகத்தைக் கேட்கிறோம்" என்று. தலைமைக்கழகத்திலே வந்து நம்முடைய நாவலர் நெடுஞ்செழியனைப் பார்த்து, நண்பர் சாரதி அவர்கள் 'எங்கள் வேலூருக்கு இன்ன காரியம் செய்ய வேண்டும் என்று கேட்டால்நாவலர் நெடுஞ்செழியன், 'இருங்கள் நான் வடக்கே போய் கேட்கிறேன்'என்று தபாலை அங்கே அனுப்பமாட்டார். அவரே படித்துப் பார்த்து, முடிந்தால், 'முடியும்' என்பார், முடியாது என்றால், 'முடியாது' என்று சொல்லி அதற்குரிய காரணத்தை விளக்குவார். விளக்கியான பிறகு, நீங்கள் சாரதியையும் கேட்கலாம்,நெடுஞ்செழியனையும் கேட்கலாம். காங்கிரஸ்காரர்களைத் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு அந்த வசதி இல்லை. அந்த உரிமை இல்லை. மாணிக்கவேலர்களை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். கட்சி மாறிவிட்டார்; யாராவது கிட்டப்போய் கேட்க முடிகிறதா?

மந்திரியைப் போய் யார் பார்க்கிறார்கள்? மந்திரியைப்போய் பார்க்கக் கூடியவர்கள் எல்லாம், மார்க்கட்டுக் காண்ராக்டு வேண்டும் என்பவரும், ஜில்லாபோர்டு காண்ராக்டு வேண்டும் என்று கேட்பவரும், பாலம் கட்ட எனக்குக் காண்ட்ராக்ட் கொடுங்கள் என்று கேட்பவர்களும், இப்படிப்பட்டவர்கள்தான் போவார்கள். ஆகையினால் 'ஏன் கட்சி மாறிவிட்டீர்கள்'? என்று இவர்களே கேட்கமாட்டார்கள். ஏன் என்றால் இவர்களே பல கட்சிகளைப் பார்த்தவர்கள்.

ஆகையினாலே, கட்சி மாறுகிற தலைவர்கள், வேறு இடத்திலே தலைமைக் கழகம் வைத்துக்கொண்டிருக்கிற கட்சிகள் இவைகளையெல்லாம் நீங்கள் நம்பினால், எதிர்காலத்திலே மெத்த ஏமாற்றத்தை அடைவீர்கள்.

யானையின்மேல் ஏறிச் செல்பவனைச் சுண்ணாம்பு கேட்கிற கதையில், ஓங்கி வளர்ந்துவிட்ட காங்கிரசைக்கொண்டு, மக்களாட்சிக்குச் சாதகம் செய்துகொள்ள முடியாது.

உங்களைப்போல பாதையிலே நடப்பவர்கள், உங்களைப்போல நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக்கூடியவர்கள், இவர்களாகப் பார்த்து அனுப்பினால் தான், நாளைய தினம் நமக்குத் தேவையான காரியத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆகையாலே நீங்கள் தி. மு. க.வை ஆதரிக்க வேண்டுவதற்குள்ள இரண்டாவது காரணம், தி. மு. க. ஏழை மக்கள் கட்சி; பாட்டாளிகளுக்காக இருக்கிற பாசறை; நடுத்தரக் குடும்பத்தாருக்காக இருக்கிற கட்சி.

அப்படியானால் காங்கிரஸ் கட்சி பணக்காரர் கட்சியா என்று கேட்கலாம். அதிலே நீங்கள் அதிகமான ஆராய்ச்சியே செய்யத் தேவையில்லை. ஏதாவது ஒரு ஊருக்கு நாங்கள் வருகிறோம் என்றால் நாங்கள் எங்கே தங்குகிறோம், காங்கிரஸ்காரர் வந்தால் எங்கே தங்குகிறார்? அந்த வீடுகளையே நீங்கள் கணக்குப் பாருங்கள். நாங்கள் வந்தால், வந்த உடனே கூட்டம் நடத்துபவரிடத்திலே போக்குவரத்துச் செலவுக்கு எவ்வளவு மன்றாடுகிறோம், அவர்கள் எந்தளவுக்கு எங்களிடத்திலே கெஞ்சுகிறார்கள், என்று பாருங்கள். அவர்கள் வந்த உடன் எதிரிலே வரும் ஏழு மோட்டாரிலே எதிலே ஏறுவது என்று போட்டா போட்டி இருப்பதை — அதையும் நீங்கள் பாருங்கள்.

எந்தக் கட்சி ஏழைக் கட்சி, எந்தக் கட்சி பணக்காரக் கட்சி என்பது உங்களுக்குத் திட்டமாகத் தெரியும். இது சொன்னால்கூடப் போதாது என்று கருதினால், நீங்கள் ஒரு காகிதம் பென்சில் எடுத்துக் கொள்ளுங்கள். வடஆற்காடு மாவட்டம் என்று எழுதுங்கள். வடஆற்காடு மாவட்டத்திலே யார் யார் பெரியபுள்ளி, யார் யார் பணக்காரர்கள், யார் யார் வட்டிக்கடை வைத்திருக்கிறார்கள், யார் யார் ஆலை நடத்துகிறார்கள், யார் யார் மோட்டார்த் தொழில் நடத்துகிறார்கள் என்று, இப்படி இலாபம்

(14-ம் பக்கம் பார்க்க)


காஞ்சீபுரம்
6—1—'57
தம்பி!
தங்கம் விளையும் நம்நாட்டினிலே
தரித்திரம் இருப்பதும் எதனாலே...?
தட்டிக் கேட்டிடுந் தமிழ்வீரர்
சட்ட சபைக்குள் இல்லாமையால்!
தட்டிக் கேட்டிடுந் தமிழ்வீரர்
சட்ட சபைக்குள் செல்லாததேன்...?
வெட்டிப் பேச்சு வீணர்கள் தம்
வெறும் பேச்சு வெற்றிபெற்றதனால்!
இரும்பு கிடைக்கும் நாடிதனில்
இல்லாமை வாட்டுவதும் எதனாலே...?
தூங்கும் இரும்பை எழுப்பிவிடத்
துரைத்தனம் நமக்கென்று இல்லாததால்...!
துரைத்தனம் நமதாக இல்லாததேன்...?
வடநாட்டுக் கடிமை ஆனதாலே...!
வடநாடு வாழ்வதும் எதனாலே...?
தென்னாட்டைச் சுரண்டும் வலியாலே...!
சுரண்டும் வல்லமை எதனாலே...?
சர்க்கார் டில்லியில் இருப்பதாலே!
டில்லியில் சர்க்கார் அமைவானேன்?
தேசியம் பேசியோர் ஏய்த்ததனால்!
தமிழர் உண்மையை அறியாததேன்?
தினசரி ஏடுகளின் புரட்டாலே...!
புரட்டொழியும் காலம் வாராததேன்...?
அறிவுத்தெளிவைப் பாமரர் அடையாததால்...!
இதையெல்லாம் இன்று கூறுவதேன்...?
இனியேனும் ஏமாற்றம் தெளிவதற்கே!
வீட்டு விளக்கு!

ஏமாற்றுக் காரரிடம்
சிக்குவதேன்...?
சுண்ணாம்பை வெண்ணெய்
என்பதாலே!

தெளிவினைப் பெறுவது
எப்போது?
தேர்தல் பொறுப்
பறியும்போது...!

பொறுப்பினை உணர்ந்தோர்
செயல்யாது?
புதுஆட்சி அமைத்திட
வழிகாணல்

ஆட்சியில் புதுமை
கேட்போர்யார்?
அருந்தொண் டாற்றிடும்
தி. மு. க.!

காங்கிரஸ் ஆட்சி
வேண்டாமோ?
காட்டுத் தீயை
வேண்டுவையோ...?

வீட்டு விளக்குத் தி. மு. க.
நாட்டுத் தொண்டன்
அதுவேயாம்!

வீட்டு விளக்கை ஏற்றிடுவீர்!
நாட்டு நலனைப் பெற்றிடுவீர்!

எனக்கு மட்டும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியின் குரல் இனிமை இருந்தால், வீடெல்லாம் கேட்கும்படி நாடெங்கும் சென்று இதுபோலப் பாடிக் காட்டுவேன்! பாடல் ஏதேனும் சுவைபடப் பாடிட வேண்டும் என்பதாலே அல்ல; நாடு கேட்டிட வேண்டிய 'செய்திகள்' இதுபோல, எங்கும் பரப்பப் பட வேண்டும் என்ற ஆர்வத்தினாலே.

பேச்சாலும் பாட்டாலும் கூத்ததனாலும், ஓவியங்களின் துணை கொண்டும், தம்பி! நாம் நாட்டு மக்களுக்கு, நல்லமுறையிலே அரசியல் சூழ்நிலைகளை எடுத்து விளக்கி, அனைவரும் உண்மையை உணர்ந்திடச் செய்தால் மட்டுமே, நாம் எடுத்துக்கொண்டுள்ள காரியத்திலே வெற்றி கிட்டும்; அந்த வெற்றியைப் பொறுத்தே இருக்கிறது மக்களாட்சியிலே மாண்பு வளருவது! நோக்கம் தூய்மையானது என்பதனாலேதான, பணபலமற்ற நாம் இந்தக் கடுமையான 'பலப் பரீட்சை'க்கு நம்மை நாமே உட்படுத்திக்கொண்டோம். நானேர் கூட்டத்திலே கூறினேன், தம்பி, பணம் இருக்கிறது ஏராளமாக, காங்கிரசாரிடம். ஆனால் அந்தப் பணத்துக்குப்பலம் இல்லை என்று. சொல்லழகு கருதிக் கூறினதல்ல, உள்ளத்திலே உண்மையாகப்பட்டது; சொன்னேன். நான் அங்ஙனம் பேசிக்கொண்டிருந்தது. சேறும் சகதியும் நிரம்பியதோர் திடல்! மழை வேறு பெய்துகொண்டிருக்கிறது! எனினும் ஆடவர் அனைவரும், பெரு மழை பற்றிப் பொருட்படுத்தாமல் நாங்கள் இருக்கிறோம் காண்பாய், என்று பெருமிதத்துடன் என்னை நோக்கி விழி மூலம் மொழிந்திட விழைந்தனர்; ஆனால் அவர்தம் எண்ணம் ஈடேற வழி இல்லை! ஏனென்று கேட்கிறாயோ!! மழை பெய்வது பற்றித் துளியும் கவலையற்றுத் தாய்மார்கள் பலர் அந்தத் திடலில் நின்றுகொண்டிருந்தனர்! அவர்களின் ஆர்வத்தைக் கண்ட பிறகு, ஆடவர் காட்டிய ஆர்வத்துக்குத் தனிச் சிறப்பு எங்ஙனம் இருந்திட முடியும்!!

திடலில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன் — எதிர்ப்புறத்தே, பெரியதோர் மாளிகை! உட்புறத்தின் உன்னதம் எப்படி இருக்குமென்பதை வெளிப்புறத்தின் கெம்பீரத்தைக் கொண்டுதான், நீயும் நானும் யூகித்துக்கொள்ள வேண்டும், அந்த மாளிகை, முதலமைச்சரும் துணை அமைச்சர்களும், துணிந்து கொள்கையைத் துறந்ததால் அமைச்சர்களானோரும், வீற்றிருந்திடும் நிலைபெற்றது!

டில்லி, நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் மாளிகை தம்பி! உனக்கும் எனக்கும், ஏழை எளியவர்களுக்கும், உடலிலே அழுக்கு இருந்திடலாகாதே என்ற அக்கறையால் உந்தப்பட்டு, வெள்ளைக்கார நாட்டுச் சோப்புக் கட்டிகளை வண்டி வண்டியாகத் தருவித்து விற்று, 'தேச சேவை' செய்துவந்த சீமானுடைய சிங்கார மாளிகை!

மகாத்மா, கோலைக் கையில் பிடித்தபடி, தண்டிக்கு 'யாத்திரை' சென்றாரே, அப்போதும் சரி, சபர்மதி ஆஸ்ரமம் அமைத்து சத்தியாக்கிரகத் தத்துவத்தை நாட்டுக்கு அளித்தாரே, அப்போதும் சரி, எர்வாடா சிறையிலே அடைக்கப்பட்டிருந்தாரே அப்போதும் சரி, இந்த மாளிகை வாசி, வெள்ளையன் நடத்திடும் கொடுமையைக் கண்டு வெதும்பினதில்லை! காந்தியார் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டம் கண்டு இந்தக் கனவான் கலங்கினதில்லை!! இந்தச் 'சேதி'களையெல்லாம் படித்திடவாவது அவருக்கு நேரம் இருந்ததா என்பதுகூட ஐயப்பாடுதான். டன் ஒன்றுக்கு இலாபம் நானூற்று நாற்பத்தைந்து வீதம் ஆறுயிரத்துப்பதினாலு டன் சோப் விற்றதிலே, இலாபம், வரவு ...என்ற 'கணக்கு' பார்த்திடவே கருத்தைச் செலவிட முடிந்தது! அவர் இப்போது, நிதி அமைச்சர், காங்கிரசாட்சியில்! மகாத்மாவின் மாண்பு பற்றி, அவரை அழைத்துப் பேசச் சொன்னால், அற்புதமாகப் பேசுவார்! அவருடைய அணிமாடத்துக்கு எதிர்ப்புறத்தில், ஆளை அழுத்திவிடும் சேறும், காலைக் குத்திவிடும் கள்ளியும் முள்ளும் நிரம்பியதோர் திடலில், நான் பேசுகிறேன்! என்னைத்தள்ளு, எண்ணற்ற மக்கள், தி. மு. கழகத்துக்கு ஆதரவு அளித்திட ஆர்வத்துடன் வந்துகூடி, வாக்களிக்கின்றனர்.

இந்தத் திடலுக்கு நான் சென்றுகொண்டிருந்தபோது, தம்பி, வெகு அருகாமையில், புயலையும் எதிர்த்து நிற்கக்கூடிய தன்மையில் அமைந்திருந்த பெரியதோர் அலங்காரக் கொட்டகையைக் கண்டேன்! ஜெகஜ்ஜோதியாக இருக்கிறது என்பார்களே, அப்படி மின்சார விளக்குகள்! நூறு மோட்டார்களுக்குக் குறைவிராது! உள்ளே 'ஆலாபனை'!! தம்பி! சங்கீத வித்வத் சபையின் விழாக் கொட்டகை அது. அதையும் பார்த்துவிட்டு, திடலில் சென்று நமது கூட்டத்தையும் பார்த்தேன்! எதிரேயோ, சோப்புச் சீமானுடைய மாளிகை!! என்னென்ன தோன்றியிருக்கும், எண்ணிப்பார், தம்பி, எண்ணிப் பார்! உனக்கும்தான் என்னென்ன தோன்றுகிறது, கூறேன்!!

"காம்போதியடி, காவேரி! அவர் பாடிக் கேட்கவேண்டும், இவருக்கு எப்போதும் 'வராளி'தான்"

"அதென்னடி அம்சா! அப்படிச் சொல்லிவிட்டாய். போனமாதம் இவர், ரசிக ரஞ்சனி சபாவில், தோடி பாடினார், என்ன பிரம்பானந்தமாயிருந்தது தெரியுமோ..."

"உன்னைப்போலத்தான் ஊர் மிளா சொல்கிறாள்..."

"அது கிடக்குது, ஏண்டி, ஊர் மிளா ஆத்திலே ஒரு உம்மணா மூஞ்சி வந்திருக்கே யார் அது?"

"நேக்கு என்னடி தெரியும். ஒவ்வொரு புதுமுகம் வருகிறபோதும்,

ஆவ, ஒவ்வொரு புது உறவாச் சொல்றா. யார் கண்டா?"

"போடி! போக்கிரி! நோக்கு எப்பவும் சந்தேகம்தான்."

"தப்படி அம்மா, தப்பு! சாட்சாத் ஜானகி அவள், போதுமோ ...சரி, சளசளன்னு நாம பேசிண்டிருந்தா, சபாக்காரா கோபிப்பா... இதோ 'ஜவாளி' ஆரம்பிச்சுட்டார், கேட்போம்"

தம்பி! ஒவ்வொரு உருவமும் ஒரு இலட்சத்தைச் சுமந்து கொண்டு, இதுபோல உல்லாசமாக உரையாடிக் கொண்டிருக்கும் இடம், அந்தக் கொட்டகை.

திடலிலே கூடிய நமது மக்களோ தோடிக்கும் காம்போதிக்கும், காதுகொடுக்க நேரம் படைத்தவர்களா!

"ஏன், இன்னும், மார்வாடி பாக்கியைக் கட்டணும் என்கிற பயம் வரலியா?"

'பணம் வந்தாத்தானே!"

"போன இடத்திலே..."

"போய் வா என்கிறான்..."

"உடனே நீ வந்துவிட்டயா? ஆமா, இப்படி இருந்தா எப்படி ஆகும்! அவன் ஈவு இரக்கம் இல்லாதவனாச்சே! உள்ளே புகுந்து, சாமான்களைக் கூடத் தூக்குவானே..."

"தூக்குவாண்டி, தூக்குவான்! இந்த துரைசாமி பிணமானா தூக்குவான்! இப்ப, உள்ளே நுழைந்தா, என்ன நடக்கும் தெரியுமேல்லோ, எலும்புக்கு ஒரு அடியா எண்ணி அடிப்பேன்..."

"போதுமே, உன்னோட வீராவேசம், பட்ட கடனைக் கட்ட வக்கு இல்லாவிட்டாலும், 'படாசு' வெடிக்கிற மாதிரிப் பேசறதிலே குறைச்சல் இல்லே..."

தம்பி! நமது ஏழைக் குடும்பங்களிலே இதுபோன்ற ஆலாபனங்களும், அதற்கேற்ற தாள வரிசைகளும்தானே, காண்போம்!

அந்த அலங்காரக் கொட்டகை, எதிரே இருக்கும் சீமானின் மாளிகை, இவற்றைக் கண்டதாலே, எனக்கு இவ்விதமெல்லாம் எண்ணம் பிறந்ததே தவிர, ஆர்வம் பொங்கிடும் நிலையில் பல்லாயிரவர் அங்கு திடலில் மழையையும் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருந்ததைக் கண்டபோது, ஏக்கம் பறந்த இடம் தெரியவில்லை; அதுமட்டுமல்ல, என் உள்ளம் சொல்லிற்று, "இதோ நீ காணுகின்றாயே, உழைத்து அலுத்த மக்கள்! ஊர் வாழ உழைப்பவர்கள்! ஏழை எளியவர்கள்!! நாளைக்கு என்ன என்று இன்று கூறிட முடியாத நிலையினர்! நாலு நாட்கள் படுக்கையில் படுத்தால், குடும்பம் என்ன செய்யும் என்ற கவலைப்பட வேண்டியவர்கள்! இந்த ஏழை எளியவர்கள் ஒன்றுபட்டு நின்றிடும்போதெல்லாம், மாட மாளிகையும் கூட கோபுரமும் சரிந்ததாகத்தானே வரலாறு சாற்றுகிறது! ஏதேதோ படித்தேன் என்று பேசுவாயே, பேதையே! இந்த மக்கள் சேற்றிலும் சகதியிலும் இருந்தால் என்ன! சீமான்கள் மாளிகைகளிலே இருந்திட்டால் என்ன!! கவலை குடைவானேன், கற்றதை மறந்திட்டாலொழிய! **அவர்கள் சிலர்; நாம் மிகப்பலர்** என்று **ஷெல்லி** கூறினானே, கவிதையைப் படித்துப் படித்துச் சுவைத்திருக்கிறாயே! இப்போது ஏன் கவலை! நிமிர்ந்து நில்! நாட்டுக் குடையவர் எதிரே இருக்கிறார்கள், அஞ்சாமல் பேசு! ஊராள்வோர் யார் என்பதைத் தீர்மானிக்கும் தகுதியும் உரிமையும் படைத்தோர் உன் எதிரிலே, எனவே ஏக்கமற்று, கூற வேண்டியதை எடுத்துக் கூறு என்று கட்டளையிட்டது; பேசினேன்.

இதை உன்னிடம் இப்போது நான் சொல்வதற்குக் காரணம், தம்பி, தேர்தல் நெருங்க நெருங்க, காங்கிரஸ் கட்சியின், பணம், பல உருவங்களிலே நாட்டிலே ஏராளமாக நடமாடும்! கவலை குடையட்டும், மருட்சி ஏற்படட்டும் என்பதற்காகக் கூறுவர், இந்தத் தொகுதியில் உள்ளவர் புத்தம்புது நோட்டுகளாக எழுபத்து ஐயாயிரம் அடுக்கி வைத்து விட்டாராம்; அந்தத் தொகுதியிலே, கிராமத்துக்கு நாலாயிரம் வீதம் பணம் ஒதுக்கி விட்டாராம்; என்றெல்லாம் பேசுவர்; அந்தச் சமயத்திலெல்லாம், தம்பி, நீ நண்பர்கட்குச் சொல்லு, காங்கிரசிடம் பணம் இருக்கிறது, ஆனால் அந்தப் பணத்துக்குப் பலம் இல்லை என்று எடுத்துக் கூறு. நாட்டிலே உள்ள நல்லவர்களைக் கேட்டுப்பார், உங்கள் கட்சி எந்தக் கட்சி என்று எடுத்துக் கூறச் சொல்லு.

எந்தக் கட்சி
உங்கள்
சொந்தக் கட்சி

இராமநாதபுரம் ராஜா
செட்டிநாட்டு ராஜா
குட்டிக் குபேரர்கள்
ஆலை முதலாளிகள்

ஆகியோர்

கொட்டமடிப்பது காங்கிரஸ் கட்சி.

பாடுபட்டுப் பிழைப்போரே!

உழைத்து!
உருக்குலைந்தோரே!

உங்கள் கட்சியாகக் காங்கிரஸ்
இருக்க முடியுமா?

என்று கேட்டுப்பார்! பதில் அளிக்கத் தயங்குவர், தம்பி, உடனேமீண்டும் அவர்களை நோக்கிக் கேள்,

புள்ளிமான் குட்டிக்கு புலியா பால் கொடுக்கும்?

என்று!

ஏழை எளியவர்கள் நடுத்தரக் குடும்பத்தார், பணம் காங்கிரஸ் கட்சியிடம் இருப்பது கண்டு அஞ்சத்தான் செய்வர்; ஆனால் அந்த அச்சத்துக்கு இடமளித்தால், உள்ள கஷ்டம் ஓராயிரமாகி, வாழ்வில் மேலும் வேதனை படர்ந்திடும் என்பதை எடுத்துக் கூறுவதோடு

பாடம் புகட்டுவீர்!

வரிச்சுமை ஏறிக்கொண்டேதான் இருக்க வேண்டுமா?

விலைவாசியும் ஏறிக்கொண்டேதான் இருக்குமா?

வாழ்விலே விசாரம் இருந்துகொண்டு தான் வரவேண்டுமா?

பரிகாரம் தேட வேண்டாமா?

ஆளும் கட்சிக்கு உங்கள் அல்லல் தெரிய வேண்டாமா?

உங்கள் மனக் குறை தெரிந்தால் தானே, ஆளும் கட்சி, குறைபாடுகளைப் போக்கும்?

மீண்டும் உங்கள் ஓட்டுகளைக் காங்கிரசுக்கு அளித்தால், குறைபாடு நீடிக்கும்; கசப்பு வளரும்.

இந்த முறை பாடம் கற்பித்துப் பாருங்கள்!

தட்டிக் கேட்டிட,

சர்வாதிகாரம் சாய்ந்திட

தி. மு. க.

அபேட்சகர்களுக்கு ஓட்டு அளியுங்கள்.

புது வாழ்வுக்கு வழி காணுங்கள்!

என்ற நல்லுரையை அளித்திடு, இல்லமெல்லாம், நல்லோர் உள்ளமெல்லாம், உண்மை சென்று தங்கிடும் வகையிலே எடுத்துக் கூறிடு பிறகு பார், வெற்றி நம்மைத் தேடி வருகிறதா, இல்லையா, என்று.

பணம் இருக்கிறது காங்கிரசாரிடம், ஆனால் அதற்குப் பலம் இல்லை என்று நான் கூறுவதற்குக் காரணம், தம்பி! நாட்டு மக்களே சிறிதளவு சிந்தித்தாலே தெரிந்துகொள்வார்கள். அந்தப் பணம், ஏழை எளியவர்களைப் பார்த்து நொந்த வாழ்விலே சிக்கிக் கிடக்கும் நடுத்தரக் குடும்பத்தினரைப்பார்த்து, என்ன பேசுகிறது என்கிறாய்! "உன் கஷ்டமெல்லாம் தீர்ந்துபோகும்! காருள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், உன்னைக் கலி தீண்டாது. உன் மாடுமனை, மக்கள் சுற்றம் எல்லாமே இன்பம் பெறும்!" என்று பேசும். ஒருபோதும் இல்லை. "பாடுபடுபவனே! என்னைக் காட்டி உன்னை ஏய்க்கிறானே எத்தன்! ஏமாளியாகலாமா? நான் எத்தனை நாள் உன்னோடு இருக்கப்போகிறேன்! ஒரு நொடியில் உருண்டோடிப் போவேன். உன் வேதனை அத்தனையும் நான் தீர்க்கவா போகிறேன்? உன் எதிர்காலத்தை, உன் குடும்ப நலனை, உன் நாட்டின் தன்மானத்தை, அத்தனையையும் இழந்துவிடுகிறாய், இளித்துப் பேசிடும் இந்தப் பேர்வழி என்னை உன்னிடம் தந்ததால்! என்னைக் கண்டு மயங்கிவிட்டால், பிறகு உன் உரிமையை இழக்க நேரிடும், ஊராள வருவோர் உன்னையே உதாசீனப் படுத்துவார்கள், உன்னைப் பெயரிட்டும் அழைக்கமாட்டார்கள், நீ பெற்ற தொகையைக் குறிப்பிட்டு அழைப்பார்கள், யார் வருவது ஆறணாவா! ஓஹோ எட்டணா வருகிறதா? வாங்கய்யா ஒரு ரூபா! வாங்க வாங்க பச்சை நோட்டு!— என்று பரிகாசம் பேசுவார்கள், ஊர் வாழத் திட்டமிடக் கூடாதா என்று அவர்களைப் பிறகு நீ உரிமையோடு கேட்டிட முடியாது, போதுமய்யா, போதும், என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பது எமக்குத் தெரியும் — 'ஓட்டு'ப் போட்டதாலேயே ஏதும் பேசிவிடலாம் என்று எண்ணிக்கொள்ளாதே, எல்லாம் எட்டெட்டணாகொடுத்துத்தான் ஓட்டுப் பெற்றோம், என்று அலட்சியமாகத்தான் பேசுவர். எனவே, வேண்டாமய்யா இந்த அற்ப ஆசை—என்னைத் திருப்பி அவன் முகத்திலே வீசி எறிந்துவிடு! வெட்கமும் வேதனையும் ஏற்படுத்திக் கொள்ளாதே" என்றல்லவா அந்தப் பணம் பேசும். ஆகையினாலேதான் தம்பி, காங்கிரசிடம் பணம் இருக்கிறது, ஆனால் பலம் இல்லை என்று கூறுகிறேன். சரிதானே நான் சொல்வது?

உழைப்பாளர்களுக்கு மட்டும், அவர்கள் எப்படியெப்படி வஞ்சிக்கப்பட்டுவிட்டிருக்கிறார்கள் என்பது நல்ல முறையிலே அறிவிக்கப்பட்டால், தம்பி, அவர்கள், காங்கிரசார், ஓட்டுகளைப் பறிப்பதற்காகக் காசு வீசும்போது, காரித்துப்புவார்களேயன்றி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

"ஆஹா! அழகு! அழகு! அற்புதம்! அற்புதம்!" — என்று சொன்னது புலி.

"புலியாரே! புலியாரே! எதன் அழகு பற்றிப்பேசுகிறீர்?" என்று கேட்டது ஓநாய்.

"ஓநாயாரே! மானின் உடலிலே உள்ள புள்ளியின் அழகைத்தான் சொல்கிறேன்" என்று புலி சொல்லிற்று!

"புலியாரே! நான்கூடப் பார்க்க வேண்டுமே, எங்கே அந்தப் புள்ளி மான்?" என்று கேட்டது ஓநாய்.

"என்வயிற்றிலே!" என்றுகூறிக் கொண்டே, ஏப்பம்விட்டது புலி!

இது காட்டில்.

நாட்டில்

'ஏழையின் உழைப்பு எவ்வளவு அருமை தெரியுமா?' என்று பூரித்துப் போகிறான் முதலாளி.

'அப்படியா? எங்கே, அவனைக் காட்டும் பார்க்கலாம்', என்றுகேட்கிறது சர்க்கார்—சில வேளைகளில்.

'முடியாதே! அவன் என் வயிற்றுக்குள்ளே அல்லவா இருக்கிறான்! விழுங்கிவிட்டேனே' என்று கூறிவிட்டு, ஏப்பம் விடுகிறான் முதலாளி.

'அப்படியா!
அதிர்ஷ்டக்காரனய்யா நீ'

என்று கூறுகிறது, சர்க்கார்.

இந்த ஆட்சிமுறை நீடிக்கவே காங்கிரஸ் ஓட்டு கேட்கிறது.

இந்தச் சூட்சமம் தெரிவிக்கப்பட்டு, மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டால், காங்கிரசினிடம் குவிந்துள்ள பணத்துக்குப் பலம் எப்படிக் கிடைக்கும்? எண்ணிப் பார்!

ஓட்டுகளைத் தட்டிப்பறிப்பதற்கு காங்கிரசில் குடிபுகுந்துள்ள சீமான்கள், பணத்தைக் கொட்டித் தருகிறார்கள், "எட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் வரை பாயுமே!' என்று இறுமாப்புடன் பேசுகிறார்கள்; ஆனால், தம்பி, இத்தகையவர்கள் ஆட்சியில் அமர்வதால் என்ன நேரிடும் என்பதை நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்காமலா இருப்பார்கள்?

ஒன்றுக்குப் பத்தாக, இதே மக்களிடமிருந்து வரிபோட்டு வாங்குவர், வாணிபத்தில் ஈடுபட்டு இலாபம் குவிப்பர், இலட்சம் செலவிட்டால், கோடி குவித்துக்கொள்வர்.

கெண்டையை வீசுகிறார்கள்! எதற்கு? வரால் பிடிக்க!

ஓட்டுக்குப் பணம் வீசுகிறார்கள்! எந்த நோக்கத்துடன்? ஆட்சியில் செல்வாக்குப் பெற்று, ஒன்றுக்குப் பத்தாக, அதே ஏழையைக் கசக்கிப் பிழிந்து, சுவைக்கலாம், கொழுக்கலாம் என்ற நோக்கத்துடன்.

இப்போதே, ஆட்சியில் அமர்ந்திருப்பவர், போடும் திட்டம்பற்றி எடுத்துக்கூறு.

*

நகைகள்
ஜாக்கிரதை

வாயைக்கட்டி
வயிற்றைக்கட்டி நகை செய்தீர்கள்

தாய்மார்களே!

சர்க்காருக்குத் தங்கம்வேண்டுமாம்

டாட்டா
பிர்லா
டால்மியா
ராஜா. சர்.
அழகப்பா

போன்றோரிடம் கேட்கவில்லை.

தாய்மார்களே!

உங்கள் நகைகளைக் கேட்கிறார்

காங்கிரஸ்
நிதி அமைச்சர்!

கூசாமல் பேசாமல் இருந்தால்,
கேட்கிறார்! சட்டம் வரலாம்!

பொதுத்தேர்தலில்
காங்கிரசுக்கு
ஓட்டு அளித்தால்

உங்கள் நகைகளைப் பறிக்கும் திட்டத்துக்கு நீங்களே சம்மதமளித்ததாகப் பொருள்!

தாய்மார்கள் எமக்கே ஓட்டு அளித்தனர், எனவே, அவர்களின் நகைகளைப்பறிக்க, எமக்கு உரிமை உண்டு என்று காங்கிரஸ் கட்சி வாதாடும்!

மாட்டுப் பெட்டிக்கு
ஓட்டளிக்காதீர்
பூட்டியுள்ள நகைகளைப்
பறிகொடுக்காதீர்!

தி. மு. கழக அபேட்சகர்களுக்கு ஓட்டு அளியுங்கள்.

பூட்டியுள்ள பொன்னுபரணத்தைப் பாது காத்துக்கொள்ளுங்கள்.

*

இதை எடுத்துக்காட்டு நாட்டு மக்களிடம்—ஓட்டளியுங்கள் பணம் தருகிறோம் என்று பேசும் காங்கிரஸ் கனவான்களை, கண்ணாலே காணப்படாதே தமக்குக் கேடளிக்கும் என்று, மக்கள் உணருவார்கள்.

இந்த நம்பிக்கை எனக்கு இருப்பதனால்தான் நான், சகதி நிரம்பிய திடலில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, சங்கீத விழாவிலே கூடி இருந்த சுகவாசிகளும், மாளிகையிலே கூடியிருந்த சீமான்களும் என் மனக்கண் முன் தெரிந்த போதிலும், கலங்காமலிருந்தேன். மக்களின் கண்களிலே வீசிய நம்பிக்கை ஒளி, உண்மையிலேயே, சீமான் விரலிலே மின்னிடும் வைரத்தின் ஒளியைவிட, உயர்தரமானதல்லவா! ஏழையின் இதயத்திலிருந்து கிளம்பி, அவன் கண்களிலே கூத்தாடும் ஒளிக்கு உள்ள பொலிவும், வலிவும், வேறு எங்கு காணமுடியும் — நாம் பெற்றெடுத்த மதலையின் புன்னகையிலும், நமக்கு அந்தச் செல்வத்தை அளித்த சேல்விழியாளின் கண் வீச்சிலுமன்றி!

எனவே தம்பி, நம்பிக்கையுடன் பணியாற்று; நாடு நமது பக்கம் என்பதை அறிந்து பணியாற்று! வெற்றிக்கு வழிகாட்டு.

அண்ணன்,



நெய்வேலியில் நடப்பதென்ன?

[ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.]

கடந்த ஐந்தாண்டுகளாகத் தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுக்கப்போவதாகவும், இதனால் பலதொழில்கள் வளரக் கூடும்என்றும் தினந்தோறும் பத்திரிகைகளில் செய்தி வந்தவண்ணம் இருக்கிறது. ஆனால் இந்த நிலக்கரியை வெட்டி எடுக்கின்ற உரிமையும் அதனால் ஏற்படுகின்ற தொழில் வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற உரிமையும் நம் இராஜ்ய சர்க்காருக்கு இல்லாமல் மத்திய சர்க்காரிடமே இருக்கிறது. நெய்வேலி திட்டம் வெற்றிபெற 500கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாகவும் இந்தச் செலவை மத்திய சர்க்காரே ஏற்றுக் கொள்ளப் போவதாகவும், வெள்ளையர்கள் (அமெரிக்கர்கள்) கடன் உதவி செய்யப் போவதாகவும் தெரியவருகிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நிலக்கரியையும், சேலத்திலுள்ள இரும்பையும் உபயோகித்து நம்தென்னாட்டைத்தொழில்வளமிக்கநாடாகத் திகழச் செய்ய வேண்டுமென விரும்பி பிரச்சாரம் செய்தும், அவ்வப்போது சர்க்காருக்கு எடுத்துக் கூறியும் வந்திருக்கிறோம்.

நிலக்கரி தோண்டும் பொறுப்பு நம் இராஜ்ய சர்க்காருக்கே இருக்க வேண்டுமென நாம் இதுவரை வற்புறுத்தியும், செலவாகும் தொகையை மத்திய சர்க்கார் கடனாக்க் கொடுத்து உதவவேண்டுமெனச்சொல்லியும்வருகிறோம். நிலக்கரியைத் தோண்டும் பொறுப்பும் உரிமையும் மத்திய சர்க்காருக்கு இருப்பதால்தான் காலதாமதம் ஆகிறது என்பதை அடிக்கடி சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம்.

வடநாட்டுக்காரர்களும் மத்திய சர்க்காரும், நம் நாட்டைத் தொழில் வளமிக்க நாடாக ஆக்க மனமில்லாமல் காலம் கடத்தி வருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவை இல்லை,

நிலைமை இப்படி இருக்க நெய்வேலிப் பகுதியில் எங்கெங்கு நிலக்கரி கிடைக்கக் கூடுமென்று நிபுணர்கள் கூறினார்களோ அந்தக் கிராமங்களை, —சுமாராக 60 கிராமங்களை,—தேவைப்படும் போது கிராமமக்கள் காலிசெய்ய வேண்டிய நிலத்தைவிட்டு வெளியேறவேண்டியது என்று ஏற்கனவே சட்டசபையில் தீர்மானம் நிறைவேறியுள்ளது. இந்தத் தீர்மானப்படி கிராமத்தை விட்டு வெளியேறிய கிராமத்தார்களுக்குப் போதுமான நஷ்ட ஈடு தரப்படவில்லை. நிலத்தரத்திற்குத் தகுந்த கிரயமோ, வீட்டிற்குப் போதுமான மதிப்பீடோ தரப்படவில்லை.

இதுவரை நிலக்கரிதோண்டுவதில் போதுமான அக்கரைகாட்டாமல், அதிகாரிகளுக்கு வீடுகட்டுகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்—உண்மையில் நிலக்கரி வெட்டும் பகுதிகளைத் தவிர மற்றப் பகுதிக்காரர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமலிருக்கலாம். நெய்வேலி நிலக்கரிப்பிரதேசச்சட்டத்தில் அகப்படாத கிராமங்களான (1) வெள்ளையங் குப்பம், (2) பெருமத்தூர், (3) விளாங்குளம், (4) கோவில் குப்பம், (5) சின்னகாப்பாங்குளம், (6) கொல்லிருப்பு ஆகியகிராமங்களைக் காலிசெய்யவேண்டுமென்றுகூறி நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தக் கிராமத்தார்களை நெய்வேலிக்கு 20 மைல் சுற்று வட்டாரக் காடுகளில்கொண்டுபோய்குடியேற்றப் போவதாகவும், வீடுகட்டிக் கொள்ள 5 செண்ட் நிலம் ஏற்கெனவே வீடு உள்ளவர்களுக்கு மட்டும் தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

நிலங்களுக்காக ஏக்கருக்கு250தான் நஷ்டஈடுஎன்றும்வீடுகளுக்குஇன்றைய மதிப்பு சர்க்கார் என்ஜினியர் அவர்களால்சுமார் ரூ1000என்றும்மதிப்பிடப் பட்டால், வீடு கட்டி 20 ஆண்டு ஆகியிருந்துஆண்டு ஒன்றுக்கு100க்கு 4%

கழிவு தேய்மானம் என்று கணக்கிட்டால் ரூ. 800 கழித்துவிட்டு பாக்கி ரூ. 200 தான் கிடைக்கக்கூடும் என்று சர்க்கார் அதிகாரிகள் கூறியதுகேட்டு கிராம மக்கள் திடுக்கிட்டு, 4-11-56ல் கடலூரில் திரு. எஸ். சாமிகண்ணு படையாச்சி தலைமையில் முதல்மந்திரி திரு. காமராஜ் அவர்களைப் பேட்டி கண்டு முறையிட்டுக்கொண்டார்கள். நிலவெளி ஏற்றம் கூடாது என்றும் தவிர்க்கமுடியாதது என்றால் போதுமான நஷ்டஈடு தரப்படவேண்டுமென்றும், அந்தப் பகுதியில், பலா முந்திரி, புளி, மா ஆகிய மரங்களுக்கு வயதுக்குத்தக்கபடி நஷ்டஈடு தரப்படவேண்டுமென்றும், குடியிருப்புக்குப் போதுமான 10 செண்ட் நிலம் இலவசமாகக் கொடுக்கப்படவேண்டுமென்றும், அவர்கள் விட்டுச் செல்லும் நிலத்தின் (பரப்புக்கு) அளவுக்கு இலவசமாக நிலமும், பயிரிடப் புதியதாக ஏரி வெட்டித்தர வேண்டுமென்றும், மற்றும் விவசாயத்திற்கு ஏற்ற வசதிகளும் செய்துதர வேண்டுமென்றும் கூறி விண்ணப்பித்துள்ளார்கள்—அதன் நகல் எனக்கு அனுப்பப்பட்டது. முதன் மந்திரி கவனிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். 12-11-56ல் தெ. மா. வ. கலெக்டர் அவர்களும், ஜில்லா போர்டு பிரசிடெண்ட் எஸ். சாமிகண்ணு படையாச்சி எம். எல். ஏ. அவர்களும் இந்தக் கிராமங்களைப் பார்வையிட்டு உண்மைநிலையை உணர்ந்து ஆவன செய்வதாகவும் வாக்கு அளித்து வந்தார்கள்.

19—11—56ல் இந்தக் கிராமங்களில் ஒன்றான பெருமத்தூர் கிராமத்தில் சர்க்கார் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் ரூ 5000 செலவில் கட்டப்பட்ட பள்ளிக்கூடத்தை மந்திரி இராமசாமிப் படையாச்சி திறந்து வைத்துவிட்டுக் கிராமத்தார்களைப் பார்த்து நீங்கள் எல்லாம் ஊரை விட்டுப்போகத் தயாராக இருங்கள் என்று கூறினாராம்.

நாங்கள் ஊரைவிட்டுப்போக வேண்டியது அவசியமானால் இந்தத் திறப்பு விழா எதற்கு என்று கிராமத்தார்கள் கேட்டு மந்திரியைக் கிண்டல் செய்திருக்கிறார்கள்.

சட்டசபைக்கு வாருங்கள் உங்களுக்கு வேண்டிய நஷ்டஈடு வாங்கித் தருகிறேன் என்றுகூறி மந்திரி எஸ். எஸ். இராமசாமி படையாச்சி வரச்சொன்னதை நம்பி கிராமத்தார்கள் சுமார் 15-பேர் 17—12—56 முதல் 20—12—56வரைசென்னையில் காத்திருந்து பலன் இல்லாமல் திரும்பிச் சென்றார்கள். 17-12-56ல் சட்டசபை ரூல் 40-பிரகாரம் நெய்வேலியைச் சுற்றியுள்ள கிராமத்தார்கள் புதியதாக வெளியேற வேண்டியவர்கள் நிலைமையை விளக்க அவசரத் தீர்மானம் கொடுத்தேன். ஆனால் 27—12—56ல் வழக்கத்திற்கு மாறாக, தீர்மானமாகக் கருதாமல் தனிக் கேள்வியாகப் பாவித்துக்கொண்டு மந்திரி மாணிக்கவேலர் ஒரு அறிக்கை வெளியிட்டார் — மேற்கூறிய குறைகளை வெளியிட என்னை அனுமதிக்கவில்லை. கேள்வி கேட்கலாம் என்று உதவி சபாநாயகர் கூறினார். ஆனால் நான் உதவிக்கேள்வி கேட்கும்போது கேள்வி பெரியதாக இருந்ததால் விளக்கம் போலிருக்கிறது என்று கூறி அனுமதிக்க முடியாதுஎன்றும், மந்திரி பதில் சொல்ல வேண்டியதில்லை என்றும் கூறித் தட்டிக் கழித்துவிட்டார்கள். அடுத்து வந்த உப மான்யக் கோரிக்கையின் பேரில்நான்பேசும்போது, நிலக்கரிப் பிரதேசமாகக் கருதப்படாத பிரதேசத்தில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு வீடு கட்டுவதற்கும் தொழிற்சாலை கட்டுவதற்கும், நெய்வேலிக்குப் பக்கத்தில் சேப்பளாநத்தம் கிராமத்தில் 1000 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது, அங்கு சர்க்கார் சிப்பந்திகளுக்கு வீடும்; தொழிற்சாலையும் கட்டலாம் என்றும் நிலத்தைவிட்டு வெளியேறும், மக்களுக்கு போதுமான நஷ்டஈடும் வளமான தோப்புகளுக்கும் மரங்களுக்கும், தகுந்த நஷ்டஈடும், போனசும் தரப்பட வேண்டும். ஒருபுறத்திலே வனமகோற்சவம் நடத்திக்கொண்டு நெய்வேலிக்கு 20 மைல் தூரத்திலுள்ள காடுகளை அழித்துவிட்டுப்புதியதாக குடியேற்றுவதால் விவசாயம் செய்ய முடியாது —நீர்ப்பாசன வசதி கிடையாது. மந்திரி S. S. R. இப்பொழுது திறந்து மூடியிருக்கிற பள்ளிக்கூடத்திற்கு பதிலும், இன்னும் மூடப்படுகிற பள்ளிகளுக்குப்பதிலாகவும்புதியபள்ளிகளும் புதிய கட்டிடங்களும் சர்க்காரே கட்டித் தர வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினேன்.

எங்களைக் கோயில் இடிப்பவர்கள் என்று வீண் பழி சுமத்திக்கொண்டு, இந்த வட்டாரத்திலுள்ள கிராமத்தார்கள் மதவாதிகள் மனம் புண்படுகின்ற அளவுக்குக் கோயில்களைச் சர்க்காரே இடிக்கிறார்கள் என்று எடுத்து உரைத்தேன்.

ஆனால் மந்திரி கனம் சுப்ரமணியம் வழக்கம்போல், என்னையும் நான் சார்ந்திருக்கிற தி. மு. கழகத்தின் மீதும் வீண்பழி சுமத்துகிற முறையில் நான் தொழில் வளர்ச்சி வேண்டாமென்றுசட்டசபையில் கூறியதாகவும், சட்டசபைக்கு வெளியே, தென்னாடு கவனிக்கப்படவில்லை — தொழில் வளர்க்கப்படவில்லை என்று குறை சொல்லிக்கொள்வதாகவும், சட்டசபையில் நான் பேசாததைப் பேசியதாகவும், நான் பேசி முடித்த அரைமணி நேரத்திலேயே இவை அனைத்தையும் கூறியதாகவும் வடிகட்டிய பொய்யைச் சொன்னார். மந்திரி பொய் சொன்னார் என்று கூறக்கூடுமா என்ற ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்பினார்கள்—ஆனால் மந்திரி பொய் சொன்னார். அதைக் கேட்பாரில்லை — சட்டசபையில் பொய்சொல்லக் கூடாது என்று சட்டமில்லை. மந்திரி உண்மைக்கு மாறாக பொதுக் கூட்டத்தில் பேசுகிற மாதிரி பேசுகிறாரே, இந்த மந்திரி தேர்தல் சமயத்தில் இதே வட்டாரத்திற்கு வந்து பார்க்கட்டும், இதன் பலனை அனுபவிப்பார்கள் என்று இடித்துக் கூறினேன் — நெய்வேலிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உத்தியோகமும் உழைப்பாளர்களுக்கு வேலைக்கு முதலில் இடமும் தரவேண்டும்,மாறாக, கான்ராக்டுகளும் கடைகளும் எல்லாம் ஜெனரல் மானேஜர் சீனுவாச அய்யங்காருக்கு வேண்டியவர்களுக்குத்தரப்படுகிறது. உத்தியோகம் அய்யங்காரர்களுக்கும் அய்யர்களுக்கும்தான் தரப்படுகிறது. இது விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்வதோடு, தென்னாட்டை வளமாக்க நெய்வேலி திட்டத்தை வெற்றிகரமாக்க சர்க்கார் பாடுபடவேண்டும். அதற்கான முயற்சியில் நானும், தி. மு. கழகமும் பாடுபடுவதோடு முழு ஒத்துழைப்பும் தரத்தயார் என்று உறுதி கூறிக்கொள்ளுகிறேன்.

★

"போற்றிப் புகழத்தக்க ஒழுக்க விதிகளை இஸ்லாத்திலே காணலாம். அதுமாத்திரமல்ல அவற்றை வாழ்க்கையில் நிலை நிறுத்துவதிலும் இஸ்லாமிய விதிகள் வெற்றி பெற்றிருக்கின்றன.

(ஹெர்பர்ட் சொற்பொழிவுகளிலிருந்து)

கேளம்-கேட்கிறது

அண்மையில் நடந்த காங்கிரஸ் செயற்குழு, இந்தியன் பிரசிடெண்டாக டாக்டர் இராஜேந்திரபிரசாத் அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.

இந்தத் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொண்டு, அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியுமென்று இன்றைய சூழ்நிலையில் நம்ப இடமேற்படுகிறது. ஆகையினால் அடுத்து இன்னும் ஐந்து ஆண்டு காலத்திற்கு இராஜேந்திர பிரசாத் அவர்களே பிரசிடெண்டாக இருப்பார் என்பது கண்கூடு.

விருப்பமுள்ள எவருக்கும் எந்தக் கட்சிக்கும் எந்த ஸ்தாபனத்துக்கும் தேர்தலில் போட்டியிட உரிமையுண்டு. அதன் பிரகாரம் இராஜேந்திர பிரசாத்தை தேர்ந்தெடுத்திருக்கிறது காங்கிரஸ் கட்சி.

என்றாலும், அவர்கள் உரிமைப்படி அந்த அடிப்படையில் வைத்துப் பார்த்தாலுங்கூட, பெருந்தொகையைச் சம்பளமாகப் பெற்றுக்கொண்டு வேலையின்றிச் சுற்றித் திரியும் ஒரு பிரசிடெண்டை நமக்குத் தந்திருக்கிறது இந்திய அரசியல் சட்ட மூலமாக.

பிரசிடெண்டுக்கு மாத சம்பளமாக ரூபாய் பதினாயிரமும் — உல்லாசச் செலவுக்கென்று பெருந்தொகைகளும் மேலும் கிடைக்கிறது.

சாதாரண எளிய வாழ்க்கையும், உயர்ந்த எண்ணங்களையும கையாண்ட காந்தியாரின் சீடர்கள் தான் இவ்வித ஆடம்பரச் செலவுகளைச் சிருஷ்டித்திருக்கின்றார்கள். பிரசிடெண்டுக்கு இவ்வளவு பெருந்தொகையை சமபளம் என்ற பெயரால் ஏன் கொட்டுகிறீர்கள் என்று கேட்டால் நேருவும் அவர் கூட்டத்தாரும் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்தியாவின் அந்தஸ்தைக் காப்பாற்றுவதற்காக இவ்விதம் செலவழிக்கிறோம் என்கிறார்கள்.

இப்படிப்பட்டவரைத்தான் இங்கு, பஞ்சத்தாலும், பட்டினியாலும் உலாவும் இந்நாட்டுப் பாட்டாளி மக்களின் தலைவராக வைத்துப் போற்றப்படுகிறது காங்கிரஸ்காரர்களால். இந்த அந்தஸ்திற்காகவா ரூபாய் பதினாயிரம் (10000) மாதாமாதம் கொட்டுகிறீர்கள், அதுதான் போகட்டும். ஒருவரேதான் தொடர்ந்து இந்தப் பதவியும் சம்பளமும் பெறவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் இவ்விதம் ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்—யூனியன் பிரசிடெண்டு பதவிக்கு — இராஜேந்திர பிரசாத்தைவிட— வேறு மேதைகள் கிடைக்கவில்லை என்று சொல்லமுடியுமா காங்கிரஸ்காரர்களால்? பார்ப்பனரின் பாதத்தைத் தண்ணீர் தெளித்து கழுவியும், நாக பூஜை செய்துகொண்டுமிருக்கும் வடநாட்டுக்காரர் ஒருவரைத்தான யூனியன் பிரசிடெண்டாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டம் கூறவில்லையே! எவருக்கும் பிரசிடெண்டு பதவிக்குப் போட்டியிட வசதி செய்யும் நோக்கத்துடனே தான் சட்டம் வகுத்துள்ளோம் என்று மார்தட்டி விளம்பரப்படுத்துகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். அங்ஙனமாயின் ஒரு முஸ்லீமையோ, ஒரு அரிஜனையோ ஏன் தேர்ந்தெடுக்கக் கூடாது? தொட்டாரைத் 'துவள' வைப்பதில் கைதேர்ந்தவர்களாயிற்றே காங்கிரஸ்காரர்கள் அவ்வித எண்ணமுள்ளவர்கள். ஒரு அரிஜனையோ, ஒரு முஸ்லீமையோ பிரசிடெண்டு பதவிக்குத் தேர்ந்தெடுத்து இன்று நாட்டில் உலாவும் ஜாதி இந்துக்களின் எண்ணத்தை மாற்றுவதற்கு ஏன் துணிவு பிறக்கவில்லை?

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பெயர் வாங்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலுங்கூட டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களையாவது தேர்ந்தெடுத்திருக்கலாமே! மேலும் வடநாட்டுக்காரர்களே இந்திய அரசாங்கத்தின் சட்ட இயந்திரத்தை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றபெரிய எதிர்ப்பு நாட்டில் இருந்து வருகிறது. இந்த நேரத்திலே தென்னாட்டுக்காரர் ஒருவரை இந்திய யூனியன் பிரசிடெண்டாக தேர்ந்தெடுத்தால், இந்த வடநாடு — தென்னாடு என்ற எதிர்ப்பு ஓரளவு குறையுமல்லவா! செய்தார்களா இந்தக் காங்கிரஸ் குழுவினர்? இவர்கள் சிந்தனை இந்த நல்ல வழிக்குச் செல்லாதது ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

பேச்சில் முன்னேற்றமும் நடைமுறையில் பிற்போக்குத் தனமும் தான் தெரிகிறது காங்கிரஸ் ஆட்சியில்.

மலையாள தினசரி 23—12—56

★

சந்தாதாரர்களின் கவனத்திற்கு

தங்கள் சந்தா முடியும் தேதி தங்கள் முகவரியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவடையும் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, அன்பு கூர்ந்து தொகையை அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளக் கோருகிறோம்.

சந்தா எண்ணைப் புதுப்பிக்கவும், முகவரியை மாற்றவும், கோருபவர்கள் அருள் கூர்ந்து தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதக் கோருகிறோம்.

பொறுப்பாளர்.

வெற்றிலைத் தொழில்-சர்க்கார் கவனிக்குமா?

[இரா. சகநாதன்]

"ஐந்தாறு சிறுவர்கள் தீட்டிய தீர்மானம்; மாதிரிப்பண்ணையாம்! இதெல்லாம் தங்கள் சுய விளம்பரத்திற்கு; இவர்களுக்கு வேறு வேலையே இல்லையா? மந்திரிகளைக் கூடப் பார்த்தார்களாம்! பிழைப்பற்றவர்கள்."

இப்படியாக ஊரிலே உள்ள மாற்றுக் கட்சிப் பெரியவர்களும், மற்றும் நம்மை திட்டித் தீர்த்துவிடவேண்டும் என்று எண்ணியவர்களும்தான் மேலே கண்ட 'பொன்மொழி'களை உதிர்த்தார்கள். நாங்கள் எல்லாவற்றையும் கேட்டோம். ஆனால் ஊர் மக்கள் வெற்றிலைக்கொடிக்கால் காய்வதைக் கண்டு வருந்தினர். ஓர் ஆண்டா? இல்லை இரண்டு ஆண்டுகள்வெற்றிலைப்பூச்சிக்கொடிய நோயால், வெற்றிலைக் கொடி காய்வதைப் பார்க்கும்போதெல்லாம் அடிவயிற்றில் நெருப்பைப் போடுகிறதே என்று வருந்தி வாடினார்கள். இதற்குப் பரிகாரம் தேட யாரும் முன்வரவில்லை.

வெற்றிலைக் கொடிக்கால் இன்று தமிழ் நாட்டில் ஏறத்தாழ பத்து இலட்சம் மக்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்ற செய்தியைக் குழித்தலையில் வெற்றிலை உற்பத்தியாளர் மாநாட்டில் பேசி இருக்கிறார்கள்.

இந்த 10இலட்சம்மக்களுக்குஆட்சியாளர் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று பொத்தனூர் தி. மு. க. எண்ணிற்று? உற்பத்தியைப் பெருக்குங்கள் என்ற நாமத்தை மட்டும் ஆட்சியாளர் நாள் தவறாமல் சங்கநாதம் செய்கிறார்கள். மழை இல்லை, நீர் இல்லை, நிலவளம் இல்லை என்றால் நாம் ஆட்சியாளரைக் குறை கூறிப்பயன் இல்லை. ஆனால், நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்றது; முப்போகம் விளையும் பூமி. பொன் போட்டால் பொன் விளையும் என்பார்களே, அதைப்போல செழிப்பான மிகவும் வளப்பமான பூமி. கிணற்றுப் பாசனமா? இல்லை வாய்க்கால் வழியோடிப் பாயும் நீர். காலால் நீரைப் பாய்ச்சினால் போதும். இப்படிப்பட்ட வளப்பமான பூமியிலே தான் வெற்றிலைக்கொடி காய்கிறது. வெற்றிலைக்கொடி அடிவேரிலே ஒரு வெண்மையான மயிர் அளவுபோல் பூச்சிகள்கூடுகின்றன. அப்படியேவாடுகிறது. ஆனால் இந்த வட்டாரம் என்றால், அதுதான், பொத்தனூர் பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், மோகனூர் முதலியவை. சேலம் மாவட்டத்தின் தெற்குப் பகுதியிலும், திருச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியான புகளூர் வட்டாரத்திலும் கொடிகள் காய்ந்தன. இங்கே வளரும் கொடி நல்ல பக்குவம் பெற்றது. வெற்றிலை ஏறத்தாழ 20-நாட்களுக்கு கிள்ளி வைத்தால் அழுகாது; ஆனால் பழுக்கும். அப்படிச் சிறப்புப் பெற்றது, இதன் வணிகமே பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களுக்குப் பெயர் பெற்றது.

கொடிக்காலுக்கு வெற்றிலை நோய் எப்படி வந்தது? என்பதை ஆராய ஆட்சியாளர் போதிய கவனம் செலுத்தவில்லை. வெற்றிலைக்கொடிக்கால் தொழிலால் ஆட்சியாளருக்கும் அதைநம்பிவாழும் மக்களுக்கும் நல்ல இலாபமே தவிர, எந்த வித இழப்பும் கிடையாது. மேலே கூறிய ஊர்களின் வெற்றிலை மட்டும் தினமும் அந்த வட்டாரத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் மேற்படி தொழிலில் வேலைசெய்து வந்தார்கள். இங்கு அறுவடையாகும் வெற்றிலை அனைத்தும் நாள்தோறும் புகளூர் புகைவண்டி நிலையத்திலும், சங்ககிரி புகைவண்டி நிலையத்திலும் ஏற்றுமதி ஆகிவந்தது. 1951-க்கு முன்பு ஏற்றுமதி செய்யப்பட்ட வெற்றிலை இன்று அதே நிலையங்களில் நூற்றில் ஒருபங்கு கூட ஏற்றுமதி ஆவது இல்லை. இதைக் கண்டு பொத்தனூர் தி. மு. க, இதற்கு எப்படியாவது பரிகாரம் தேடவேண்டும் என்று முன்வந்து தோழர் ஈ. வே. கி. சம்பத்து அவர்களை பொத்தனூர் தி. மு. க. சார்பாக அழைத்து, பொதுக் கூட்டம் கூட்டி மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி, வெற்றிலைத் தொழிலாளர்கள் நிலைமையை கூட்டத்திலே விளக்கி பல தீர்மானங்கள் போடப்பட்டன. அதிலே மிக முக்கியத்துவம் பெற்றது தான் இந்தப் பகுதியில் வெற்றிலைக் கொடி காய்வதால் இதை ஆராய்ச்சி செய்ய மாதிரிப் பண்ணை அமைக்க வேண்டும் என்பது. வெற்றிலை அழுகும் சரக்காக இருப்பதால அதற்கு வரி, விதிவிலக்கு வேண்டும் என்றும், வெற்றிலைக் கூடைகளை வெளியூர்களுக்கு புகை வண்டி நிலையத்தில் பார்சல் செய்ய அனுப்பினால் மரவேக்கன் தேவை என்றும் அந்தக் கூட்டத்தில் ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது. தி. மு. க. சார்பாகச் செய்வதைவிட ஊர்த் தொழிலாளர்களையும், உற்பத்தியாளர்களையும் மாற்றுக் கட்சிக்காரர்களையும் அழைத்து வெற்றிலைத் தொழிற் சங்கம் அமைத்து, அந்த அமைப்பின் மூலம் வேலைசெய்யும்படி தோழர் சம்பத் அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அதன்படி சங்கம் அமைக்கப்பட்டது. அந்தச் சங்கத்திலேயும் முற்போக்காளர் பலரையும் அழைத்து ஒத்துழைப்புக் கேட்கப்பட்டது—மறுத்தார்கள் இறுமாப்புடன்.

கடைசியாக தி. மு. க. வே வெற்றிலை தொழிலாளர் சங்கத்தை மேற்கொண்டது. பல தீர்மானங்களை நிறைவேற்றி எல்லாக்கட்சிக்காரர்களுக்கும் அனுப்பப்பட்டது. (நீதிக் கட்சி, திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட்) யாரும் இதைசட்டசெய்யவில்லை. பிறகு அரக்கோணத்தில் கூடிய தி. மு. க. பொதுக் குழுவிலேயும் திருச்சியிலே கூடிய தி மு. க. பொதுக் குழுவிலேயும் பொதுச்செயலாளர் அண்ணா அவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன். அண்ணா அவர்கள் தோழர் கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் மூலம் சட்டசபையில் பேசும்படியும் அதற்குப் பரிகாரம் தேடும்படியும், சொல்லி அவரே தோழர் கோவிந்தசாமியை அழைத்து எடுத்துச் சொன்னார்கள். தி. மு. க. மாநாட்டில் தீர்மானங்கள் போடப்பட்டன. சென்னை சட்டசபையில் திராவிட பார்லிமெண்டரி செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் பி.ஏ., எம்.எல்.ஏ., அவர்களும், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களும் வெற்றிலைக் கொடிக்கால் காய்வதையும் அதனைத்தடுக்க ஆட்சியாளர் ஏதும் செய்யாததை எடுத்துச் சொல்லியபொழுது அதற்கு மருந்துபோட உத்தரவு தருகிறேன் என்று விவசாய அமைச்சர் கூறினார். இலவசமாகக் கொடுக்கும்படி கேட்டதில், பாதிவிலையில் தருவதாக வாக்குக்கொடுத்தார்கள். இதனால் எந்த வித பயனும் கிடைக்கவில்லை. பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்க மூலம் ஒரு தூதுக்குழு அமைக்கப்பட்டது. இந்தப்பகுதி எம். எல். ஏ. ஆன தோழர் பொன்னு—ரெங்கசாமி அவர்களை அமைப்பாளராகக்கொண்டு தி. மு. க. செயலாளர் திரு ஜி. பி. சோமசுந்தரம், எம். பி. சுப்பிரமணியம் பி. ஏ. எம். எல். ஏ.; ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆர். சன்முகம் பி. ஏ., இரா. சகநாதன், மலை—சகநாதன் ஆகியோரைக் கொண்ட குழு அமைத்து அதன்படி சென்னைசென்று முதலமைச்சர் காமராசரிடம் சொல்லி பரிகாரம் தேட முன் ஏற்பாடு செய்யப்பட்டது. வெற்றிலை தொழிற் சங்க

திராவிட நாடு

மலர் 15 | 6-1-57 | இதழ் 27

வெறும் கண்துடைப்பு

—:✶:—

தீண்டாமை ஒழிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைந்துவிட்டதாக அறநிலைய அமைச்சர் பரமேசுவரன் அவர்கள் சென்ற கிழமை மேல் சபையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் குறிப்பிட்டார்.

கணிசமான முன்னேற்றம் என்று மந்திரி எதைவைத்து மதிப்பிட்டுக் கூறினார் என்பது ஒருபுறமிருக்கட்டும். ஒரு வேளை தாம் கோயிலுக்குப் போகிறபோது கோயிற் குருக்கள்மார் பூரண கும்பத்துடன் தம்மை வரவேற்பதைக்கொண்டு, 'கணிசமான முன்னேற்றம்'' என்பதற்கு இது ஒன்றேபோதாதா, என்று கருதி அவ்விதம் கூறியிருக்கலாம். ஆனால், தீண்டாமை ஒழிப்பில் கணிசமான முன்னேற்றம் என்பதற்குப் பதில் கண்துடைப்பு வேலையே நடக்கிறதென்று கூறினால், அது மிகமிகப் பொருத்தமாக இருக்கும். காரணம் சர்க்காருக்கு இன்னும் அந்தத் தைரியம் பிறக்கவில்லை. தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக இறங்கினால் எங்கே சர்க்கார் இயந்திரம் இயங்காமல் போய்விடுமோ என்ற கிலி அவர்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

அண்மையில், சர்க்கார் சார்பில் இயங்கும் அரிஜன க்ஷேமநல இலாகாவினர் ஒரு தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டி அச்சிட்டு இரண்டொரு இடங்களுக்கு அனுப்பினர். அது ஒட்டப்பட்டது, மறுநாளே அந்தச்சுவரொட்டியை வாபஸ் பெறவேண்டிய நெருக்கடி ''நம்ம'' சர்க்காருக்கு ஏற்பட்டு மெத்தத் தொல்லைப்பட்டு ஒருவாறு தப்பித்துக்கொண்டது. ''ஐயனே! மெய்யனே! அடியேன் செய்த பிழை பொறுத்தருள்க, இதோ வாபஸ் பெற்றுவிட்டேன் அந்த 'ஆகாத சுவரொட்டிகளை'' என்று கூறிச் சர்க்கார் தான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டது. இன்னும் அந்தக்கிலி சர்க்காரை விட்டுப்போகவில்லையோ என்னவோ, சென்ற கிழமை கூட மேல் சபையில் அந்தச் சுவரொட்டி விஷயம் பேசப்பட்டு, இனியும் எங்காவது தப்பித் தவறி அந்தச்சுவரொட்டி காணப்பட்டால் கடிதில் அதனை அகற்றிவிட்டு மறுவேலை பார்ப்பதாகக் கணிச முன்னேற்றம் கண்ட கனம் அமைச்சர் கனிவுரை வழங்கியுள்ளார். இந்தச் சுவரொட்டி விஷயம் இருக்கட்டும்; சில தினங்களுக்கு முன் திருவானைக் கோயிலில் ஒரு சம்பவம் நடைபெற்றது.

ஆருத்திராவன்று திருவானைக் கோயிற்சாமி வீதிவலம் புறப்பட்டது. சாமிக்குப் பக்கத்தில் அந்தக் கொயிற் குருக்கள்மார் சிலரும் உட்கார்ந்து கொண்டு, தங்களையும் சேர்த்துச்சுமக்கும்படி கூறினராம். சாமி தூக்குபவர்கள் அதற்கு மறுக்கவே—ஆண்டவனை மட்டுமே சுமப்போம்— அர்ச்சகரையும் சேர்த்துச் சுமக்கமாட்டோம் என்று கூறிவிடவே, ஊர்வலம் கிளம்பிய கடவுள் உள்ளேபோகவேண்டியதாயிற்று. தீண்டாமை ஒழிப்பில் கணிசமான முன்னேற்றம் கண்ட அறமோம்பும் அமைச்சர் இந்த விஷயத்தில் நாளிது வரை தலையிட்டு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தீண்டாமை ஒழிப்புக்காக அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் அவசர அவசரமாக எடுத்து உள்ளே அடுக்கிவைக்கப்படுகின்றன. ஊர்வலம் கிளம்பிய கடவுள், அர்ச்சகர் இல்லாமல் ஒண்டியாக நான் ஊர்சுற்றமாட்டேன்என்று உள்ளே போகிறார்—இந்த இலட்சணத்தில் தீண்டாமை ஒழிப்பில் கணிச முன்னேற்றம் கண்டுவிட்டதாகச் சர்க்கார் சார்பில் தம்பட்டம் அடிக்கப்படுகிறது. எனவேதான் தீண்டாமைஒழிப்பில் உருப்படியான காரியம் எதுவும் செய்யப்படுவதில்லை— வெறும் கண்துடைப்பே நடைபெறுகிறதென்று கூறுகின்றோம்.

★

(முன்பக்கத் தொடர்ச்சி)

சார்பாகச் செல்வதால் காங்கிரஸ் எம். எல். ஏ., ஆன திரு. டி. எம். காளியண்ணன் M.A.B.Com M.L.A. திரு. சாம்பசிவரெட்டியார் எம்.எல்.ஏ. மற்றும் திரு. எஸ். கே. பேபி எம்.பி., ஆகியோர்களை அழைத்துச் சென்று திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தூதுக்குழு சென்று முதலமைச்சர் திரு. காமராஜர், வேளாண்மை அமைச்சர் திரு. பக்தவத்சலம், ரெவின்யூ அமைச்சர் திரு. மாணிக்கவேலர் ஆகியோரைக் கண்டு குறைகளைச்சொல்லியபொழுது, ஆவன செய்வதாகக் கூறினார்கள். வரி விதிவிலக்கு செய்தார்கள். மாதிரிப் பண்ணை விஷயம் கவனிப்பதாக மாநில வேளாண்மை டைரக்டராயிருந்த திரு. சிவராமனை அனுப்பினார்கள். மருந்து போட்டால் போதும் என்றுபார்த்துச்சொல்லிவிட்டு போய்விட்டார். நாள்தோறும் கொடி காயவும், மக்கள் ஊரைவிட்டும், வீட்டைவிட்டும் ஓடவுமான பரிதாப நிலை இருந்துகொண்டே இருந்தது. தி.மு.க. சார்பாகப்பல மனுக்கள் திரு. இராசகோபாலாச்சாரியார் காலத்திலிருந்து கொடுக்கப்பட்டு வந்தது.

அண்ணா அவர்கள் அடிக்கடி ஆட்சியாளருக்கு நினைவுபடுத்தித் தனது கட்டுரையில் எழுதிக் கொண்டும், அண்மையில் பாண்டமங்கலத்தில் நடந்த தி. மு. க பொதுக் கூட்டத்தில் வெற்றிலைத் தொழிலாளர் நிலைமை வர, வர மோசமாகவும் நாதியற்ற நிலையிலும் போகிறதே, ஏன் இந்த 2 வது ஐந்தாண்டு திட்டத்தில் சில இலட்சத்தைச் செலவழித்து மாதிரிப் பண்ணை அமைத்துக்கொள்ளக் கூடாது என்று ஆட்சியாளருக்கு அறைகூவல் விட்டார். அதன்பிறகு பொத்தனூர் தி. மு. க. பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெற்றிலைத் தொழில் நசித்து வருவதைப் பற்றியும், வெற்றிலைக் கொடிக்காலை பார்வையிட்டு வந்ததையும் மக்களிடத்தில் சொல்லி, ஆட்சியாளர் கவனம் செலுத்தாததைக் கண்டித்து, ஏறத்தாழ ஐந்தாண்டுக்கு மேலாக இந்தப் பிரச்சனையை வாளா விட்டிருப்பது மிக மிக வருந்தத்தக்கது, சென்னை அரசாங்கமோ, மத்திய அரசாங்கமோ இதை ஆராய வக்கில்லாவிட்டால் ஏன் ஒரு ரஷ்ய நிபுணரையோ, அல்லது அமெரிக்க நிபுணரையோ வரவழைத்து இதற்குப் பரிகாரம் தேடக் கூடாது? என்று நமது பொதுச் செயலாளர் கேட்ட பிறகுதான்சென்றமாதத்தில் மாதிரிப் பண்ணையை அமைக்க சென்னை மாநில வேளாண்மை டைரக்டர் திரு. ஆர். எம். சுந்தரம் அவர்கள் பொத்தனூர் வந்து நிலத்தைப்பார்வையிட்டு ஒப்பந்தம் செய்து சுமார் 42.000 ரூபாய் செலவு செய்து மாதிரிப் பண்ணை நடத்தலாம்என்றுமுன்வந்து இருக்கிறார்கள். இப்பொழுது நிலத்தைப் பண்படுத்தி கிடங்கும் வெட்டி விதைபோடும் தருணத்தில் இருக்கிறார்கள்.

வெற்றிலைக் கொடிக்காலுக்கு (மாதிரிப் பண்ணைக்காக) 87 சென்ட் நிலம் குத்தகைக்குப் பெற்றிருக்கிறார்கள். இது மிக மிகக் குறைவு. செய்வதைச் சிறிது தாராளமாகச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். குறைந்தது 2 ஏக்கர் நிலமாவது வேண்டும்.

ஒரு ஏக்கர் நிலத்தில் வெற்றிலைக் கொடியை நட்டு அதன் ஆராய்ச்சியைப் பார்ப்பது, மற்றொன்று காய்ந்த

கொடிக் காலை விலைக்கு வாங்கி அதை ஆராய்ச்சி செய்வது இப்படி செய்ய வேண்டும். தவிரவும், வெற்றிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரியவர்கள் இருவரையும் பொத்தனூர் வெற்றிலைத் தொழிற் சங்கத்தின் பிரதிநிதி (அதிலேயும் டி தொழிலில் ஈடுபட்டவர்கள்) இருவரையும் ஊராண்மைக் கழகத் தலைவரையும் சேர்த்து ஒரு ஆலோசனைக்குழு அமைத்து அதன்படி மாதிரிப் பண்ணையை ஆராய்ச்சி செய்து வந்தால் மிக மிக நல்லது. ரூ 42,000—இந்த ரூபாய் போதாது. இன்னும் சேர்த்துச்செய்ய வேண்டும். இதை ஆட்சியாளர் தேர்தல் சமயத்திற்கு கண்துடைப்புவேலை என்று எண்ணாமல் உண்மையாகவே மக்களின் வேலையில்லா நிலைமையையும், வறுமையையும் வாட்டத்தையும் கண்டு நல்ல பரிகாரம் தேடச் சிறிது தாராளபுத்தியோடுநடந்துவெற்றிலைத் தொழில் வளர ஆக்கந்தரவேண்டும். மாதிரிப் பண்ணை அமைக்கும் இந்தத் தருணத்தில் வெற்றிலைக்கொடிகாய்வதும் அதற்குப்பாதி விலையில் மருந்து ஆட்சியாளர்கொடுத்தும்யாரும்அதை வாங்க முன்வரவில்லை என்று என்னிடம் ஒருவிவசாயடெமான்ஸ்டிரேட்டர் கூறினார். இந்த ஐந்தாண்டு காலத்தில் எல்லாம் கொடிநட்டு ஒவ்வொரு ஆண்டும்காய்வதால் அதனால் பலர் வீடிழந்தும் மற்றப் பொருள்களை இழந்தும் வாடுகிறார்கள். அப்படி இருக்கும் பொழுது அவர்கள் எப்படி பாதி விலை மருந்தை வாங்க முடியும்? சோற்றுக்கே திண்டாட்டம். வெற்றிலைக் கொடிக்கால் வளர்ச்சி பெற்று வளம் பெறும் வரை ஆட்சியாளர் டி தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மருந்தை வட்டியில்லாக் கடனுக்குக் கொடுத்தும், சிறிது நிவாரணம் பொருளுதவியாக கொடுத்தால்தான் அவர்களது இருண்ட கண் திறக்கும். வெற்றிலைக் கொடிக்கால் எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் ஆட்சியாளர் சமநீதி வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம். வளர்க வெற்றிலைத் தொழில்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

வருகிற பணக்காரர் தொழிலை எல்லாம் ஒரு பக்கத்திலே எழுதி, இவர்களெல்லாம் எந்தக் கட்சி என்று கோடிட்டுப் பாருங்கள். M. B. D. ஷெரீப் வட ஆற்காடு மாவட்டத்திலேயே பெரிய மோட்டார் மன்னர். M. B. D. ஷெரீப் எந்தக் கட்சியிலே இருக்கிறார்? காங்கிரசில்; திருவண்ணாமலையில் இருக்கிற தேவராஜன, நல்ல மோட்டார் தொழிலை நடத்திக் கொண்டு இருக்கிறார். அவர் எந்தக் கட்சியிலே இருக்கிறார்? எந்தக் கட்சியும் வேண்டாம் என்றார். உதவி செய்கிற கட்சி என்னுடைய கட்சி என்றார், நம்முடைய கட்சி உதவிகூடச் செய்தது. 'உன்னுடைய கட்சி செய்யவேண்டியதைச் செய்தாயிற்று; இனி காங்கிரஸ் ஏதாவது செய்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன்' என்று இப்போது காங்கிரஸ் கட்சிக்குப் போய்விட்டார். குடியேற்றத்தில் இருக்கிற சண்முக முதலியார் எந்தக் கட்சி? காங்கிரஸ் கட்சி.

எந்தெந்த ஜில்லாவிலேயும் நீங்கள் பார்த்தாலும், கோயமுத்தூரிலே இருக்கிற ஆலைமுதலாளிகள் அத்தனைபேரும், தூத்துக்குடியில் இருக்கிற வியாபாரிகள் அத்தனைபேரும், விருதுநகரிலே இருக்கிற பெரிய பெரிய வியாபாரிகளும் மதுரையிலே இருக்கிற மில் சொந்தக்காரர்களும், இப்படி இருக்கிற அத்தனை பணக்காரர்களும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறார்கள். இந்தப் பணக்காரர்களிடத்திலே வேலை செய்கிற அத்தனைபேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரத்தைப் பார்த்த பிறகு உங்களுக்குச் சந்தேகம் ஏன்? காங்கிரஸ் கட்சி பணக்காரர் கட்சியா ஏழைக் கட்சியா என்பதிலே உங்களுக்கு ஐயப்பாடு ஏற்படக் காரணம் என்ன?

இராமநாதபுரம் ராஜா பெரிய பணக்காரர், அவர் காங்கிரஸ் கட்சி. செட்டிநாட்டு ராஜா பெரிய கோடீஸ்வரர் – அவர் காங்கிரஸ் கட்சி. சிவகங்கை ஜமீன்தார் பெரிய கோடீஸ்வரர், அவர் காங்கிரஸ் கட்சி. அழகப்பச் செட்டியார் காங்கிரசை ஆதரிக்கிறார். கோவை இரத்தினசபாபதிச்செட்டியார் குடும்பத்தார் காங்கிரசை ஆதரிக்கிறார்கள். வெட்கங்கெட்ட இந்த நிலையை உங்களிடத்திலே சொல்லிக்கொள்வதிலே நான் வருத்தப்படுகிறேன; காங்கிரசுக்கு ஒரே வைரி என்று கோவையில் கொண்டாடப்பட்டு வந்த சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரின் புதல்வி காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறார்கள். டி. வி. சுந்தரம் அய்யங்கார் கம்பெனி காங்கிரசுக்கு வேலை செய்கிறது. நாட்டிலே இருக்கிற பஸ் முதலாளிகள் அத்தனை பேரும் காங்கிரஸ் பக்கத்திலே அணிவகுத்து நிற்கிறார்கள்.

ஆகையினால் ஏழை மக்களாகிய நம்முடைய மக்கள், பாட்டாளித் தோழர்கள், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இனி வாழ வேண்டியவர்கள், வாழுவதற்கான வசதியைப் பெறவேண்டியவர்கள், ஒரு வேளைசோற்றுக்கும் வழி இல்லாமல் திண்டாடிக்கொண்டிருப்பவர்கள், காலையிலே எழுந்து மாலை வரையிலே பாடுபட்டாலும் நாகரிகமாக வாழுவதற்கு வழி கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருப்பவர்கள், சிறு சிறு கடை வைத்து வியாபாரம் நடத்தி, அதிலே கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்துகிறவர்கள், ஆலையிலே வேலை செய்கிற தொழிலாளிகள், பீடி சுற்றும் தொழிலாளிகள், கைவண்டி இழுப்பவர்கள், கட்டை வெட்டுபவர்கள், மூட்டை தூக்குபவர்கள், குப்பை கூளம் கூட்டுபவர்கள், சிறு குடித்தனம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் இப்படி இருக்கிற மக்கள் அத்தனை பேருக்கும இன்றைக்கு காங்கிரசிலே இடம் இல்லை; நம்முடைய கழகத்திலேதான் இடம் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்பதற்கான காரணம், அது உங்கள் கழகம். உங்களாலேயே ஆக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிற கழகம்.

எட்டு வருஷ காலமாக தி. மு. க. நாட்டிலே பணியாற்றிக்கொண்டு வருகிற காலத்தில் யாருடைய உதவியினாலே அது வளர்ந்தது? அழகப்ப செட்டியார்களுடைய உதவியா அல்லது குமார ராஜாக்கள் உதவியா அல்லது கோடீஸ்வர்கள் தந்த பணமா என்று பார்த்தால், நீங்கள் தந்த பணம், நீங்கள் தேடித் தருகின்ற காணிக்கை, உங்களுடைய ஆதரவு, இவைகளை வைத்துக்கொண்டுதான் எட்டு வருஷ காலமாகத் தி. மு. க. ஓங்கி வளர்ந்திருக்கிறது—இந்தக் கழகம், நாட்டிலே ஓங்கி வளர்ந்திருப்பதற்குக் காரணம், கழகத் தோழர்கள் பட்ட கஷ்ட நஷ்டமும், ஏற்றுக்கொண்ட தியாக உணர்ச்சிகளும் ஆகும். இவற்றை நாடு பார்த்து நல்ல ஆதரவு தந்திருக்கிறது,

இந்தப் பேராதரவைத் துணையாக வைத்துக்கொண்டுதான் தேர்தலிலே ஈடுபட இருக்கின்றோம்.

இந்த ஆதரவு நீடித்தும் நல்ல வகையிலே பதப்பட்டும், அற்புதமாகப் பக்குவப்படுத்தப்பட்டும், அரசியல் தெளிவோடு இது ஆக்கப்பட்டும், நல்ல பலன் கிடைக்குமானால், நிச்சயமாக நண்பர் நடராசன் சொன்னதைப் போல் இந்தத் தேர்தலில் நூற்று ஐம்பது இடங்களில் மிகப் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெறுவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது.

ஒவ்வொரு காங்கிரஸ் அபேட்சகருடைய முகத்தையும் பார்த்துவிட்டு வந்தவர்கள் சொல்லுகின்றார்கள், யாரை அபேட்சகராகத் தேர்ந்தெடுக்க வில்லையோ காங்கிரசில், அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். 'என்னய்யா இவ்வளவு மகிழ்ச்சி?' என்றால், 'அப்பா தப்பினேன்; நான் இல்லை' என்கிறார். தேர்ந்து எடுக்கப்பட்டவரைப் பார்த்தால், கவலையோடு இருக்கிறாராம், 'ஏனய்யா கவலை?' என்று கேட்டால், 'காமராஜ் ஒரே பிடிவாதமாக நான்தான நிறகவேண்டும் என்கிறார். எங்கய்யா பணம் இருக்கிறது? இந்தக் கழகத்துக்காரர் வேறு நிற்கிறார்களாம்' என்று அவர்கள் கவலையோடு இருக்கிறார்கள்'' என்று—கழகத் தோழர்கள் அல்ல — காங்கிரசிடத்திலேயே தொடர்பு கொண்டவர்கள் என்னிடத்தில் சில வேளைகளில் வந்து சொல்லுகிறார்கள்.

எனக்கு அரசியல் நிலைமை புரிகின்றது. ஆகையினாலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறுவதற்கு நல்லவாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை எல்லாம் இழந்துவிடாமல் இருக்கவேண்டுமானால், நீங்கள் இன்றைய தினம் காட்டுகின்ற இந்த உற்சாகத்தைத் தொடர்ந்து காட்டவேண்டும். தேர்தல் பிரசாரத்தை நாங்கள் வந்துதான் நடத்தவேண்டும் என்று நீங்கள் விட்டுவைத்திருக்கக் கூடாது. தனித்தனியான முறையிலே, நீங்கள் செல்லுகின்ற இடங்களிலே எல்லாம் தேர்தல் பிரசாரம் நடத்தவேண்டும். தேர்தல் பிரசாரத்திலே ஈடுபடுவதற்கு,—நீங்கள் பார்த்தால் —பார்ப்பனருக்கு இருக்கிற திறமை நம்மவர்களிலே சிலபேருக்கு இருப்பது இல்லை. நம்மவர் எப்போதாவது ரேடியோ கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், பாடுகிறவர் பார்ப்பனரல்லாதவராக இருந்தால்—சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை என்று வைத்துக்கொள்ளுங்கள்—பக்கத்திலே இருக்கிற ஒரு பார்ப்பனர் சித்தூர் சுப்பிரமணியத்தின் பாட்டு பிடிக்கவில்லை என்பதை நமக்குச் சொல்வதற்காகச் சொல்லுவார்: "யாரையா அப்படிக் கத்துவது'' என்று. 'யார் பாடுவது?''என்றுகூடக்கேட்கமாட்டார். 'யார் இப்படிக் கத்துவது என்பார். உடனே பக்கத்திலே இருக்கிற நாம் சித்தூர் சுப்பிரமணியம்தான் என்று தெரிந்தாலும், பக்கத்தில் இருக்கிற ஐயர் கத்துவது என்று சொல்லிவிட்டாரே என்ற எண்ணத்தினால் 'இல்லை — சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை-தொண்டை ஏதோ கட்டிவிட்டது போல இருக்கிறது''—என்போம்.

"என்ன தொண்டை கட்றது! அந்த ஆளுக்குச் சாரீரமே கட்டைதான்' என்று ஐயர் அடித்தல்பேசுவார். ஆமாம் எனறு சொல்லிவிட்டு நம்முடைய அண்ணன் வீட்டுக்கு வந்துவிடுவான். அரியக்குடி இராமானுஜஐயங்காருடையரேடியோ நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்— நம்முடைய நணபன் நினறு கொண்டு கேட்பான், கட்டை சாரீரம், எங்காவது மேல் ஸ்தாயிக்குப் போக வேண்டும் என்றால் ஆள் கஷ்டப்பட்டுமேலுக்குஎழும்பினால்உண்டே தவிர, தொண்டை எழும்பாது, அதை நீங்கள் அரியக்குடியின் கச்சேரிக்குப் போனால் அவருடையகையும் உடலும் எந்த அளவுக்கு மேலே உயருகிறது என்று பார்க்கலாம், என்றாலும் அந்த ரேடியோவைக் கேட்கிற ஒருபார்ப்பனர் 'ஆஹா என்ன அருமையாக இருக்கிறது. அந்த மேலேபோய் அப்படியே நினறார்பாருங்கள், அதிலே தான மகிமையே இருக்கிறது என்பார். பக்கத்திலே இருக்கிற நம்முடையதோழர்சொல்லுவர்' என்ன மேலே சாரீரம் எட்டவில்லையா?' என்பார். பைத்தியக்காரா அவருக்கா எட்டாது! உன்னைப் போகச் சொல்லுகிறார்.' என்று சொல்லிவிட்டுக் 'கற்பனையை அப்படிக் காட்டிவிட்டார்' என்பார். இப்படி அந்தக் கச்சேரிக்கு மதிப்பைத் தேடுவார். அதைப் போல நம்முடைய தோழர்கள், தேர்தல் பிரசாரம் செய்வதற்கு நமக்குத் தெரிவதில்லை. பார்ப்பனத் தோழர்கள் காங்கிரசுக்கு தேர்தல் பிரசாரம் எந்த வகையிலே செய்தார்கள்? போன தடவை நடைபெற்ற தேர்தலிலே நான்பார்த்திருக்கின்றேன், காப்பி ஆற்றிக் கொண்டே இருப்பார் பார்ப்பனத் தோழர். காப்பி சாப்பிடுகின்றவர் அதை வாங்கிச் சாப்பிட்டுப் பார்த்து "என்ன ஐயரே காப்பி நன்றாக இல்லையே'' என்றால் "எப்படிசார் நன்றாக இருக்கும்? காப்பிக் கொட்டை விலை என்ன தெரியுமில்லே—ஏழரைரூபா—இந்தப் பாழாய்போன ஆட்சியிலே ஏழரையும் விற்கும் எட்டரையும் விற்கும் — காங்கிரஸ் ஆட்சி வந்தால் காப்பிக் கொட்டை விலை குறையும்; காப்பியும் நன்றாக இருக்கும்; திவ்வியமாக நீங்கள் சாப்பிடலாம் – என்னசார் காங்கிரசுக்குத்தானே உங்கஓட்டு?' என்று இரண்டணாவை வாங்கிக் கொண்டு பிரசாரமுமசெய்துநம்முடைய அண்ணனை வெளியே அனுப்புவார், நம்முடைய தோழர் யாராவது ஒருவர் ஓட்டலுக்குப் போகட்டும்; அங்கே இருக்கிற பார்ப்பனத் தோழர் அவரைப் பார்த்து, என்னசார் உங்க கழகம் தேர்தலில் நிற்கிறதா? என்று கேட்பார் 'நிற்கிறது' என்பதற்கே கூச்சப்படுகின்றதோழர்கள் உண்டே நம்மிடத்தில்.

"நிற்கும் போலத்தான் இருக்கு —இரண்டு போண்டா'' என்று தனக்கு எது தேவையோ அதை வாங்கிக்கொண்டு வந்துவிடலாம் என்று கருதுவாரே தவிர, அங்கு பிரசாரத்தை நடத்தலாம் என்று அவருக்குத் தெரிவதில்லை. ஒரு காலத்திலே லெனினிடத்திலே, விறகு வெட்டுகின்ற ஒரு தோழன் வந்துகேட்டானும், நானும் பொதுஉடைமைக்குப் பாடுபட வேண்டும் என்று. அதற்கு லெனின் சொன்னாராம், 'நீயோ விறகு வெட்டுபவன, உனக்கோ பேசத்தெரியாது, எழுதத்தெரியாது — நீ என்ன உதவி செய்ய முடியும் — உனக்குப் பொது உடைமையிலே நம்பிக்கை வந்தால் அதுவரையில் போதும்' என்று அவர் சொன்னாராம். விறகு வெட்டி சொனனானும் 'லெனின அவர்களே! நீங்கள் சொல்வது உண்மைதான். எனக்குப் பேசத் தெரியாது, எழுதத்தெரியாது. ஆனால் எனக்குமட்டும் பேசத் தெரிந்தால் என்னென்ன சொல்லுவேன் தெரியுமா? எனக்கு மட்டும் எழுதத்தெரிந்தால், என்னென்ன எழுதிக்காட்டுவேன்

தெரியுமா?' என்று உற்சாகத்தோடு சொன்னானாம். அதைக் கேட்டு லெனின் அவனைப்பார்த்து 'உன்னுடைய உள்ளத்திலே இருக்கிற உற்சாகத்தை நீ பேசித்தான் காட்டவேண்டும், எழுதித்தான் காட்டவேண்டும் என்று இல்லை. நீ செய்கிறகாரியத்திலேயே காட்டலாம்' என்றாராம். அப்படி அவரவர்கள் அந்தந்தத் துறையில் ஈடுபட்டிருந்துகொண்டே தங்களுடைய நல்ல பணியைச் செய்யலாம் என்று லெனின் சொன்னதைப்போல், நீங்கள் ஈடுபட்டிருக்கின்ற ஒவ்வொரு காரியத்திலும், 'என்ன அண்ணாத்துரை கோடரியா தூக்கச் சொல்லுகிறாய்?' என்று கேட்க வேண்டாம். 'கத்தியா எடுக்கச் சொல்கிறாய்?' என்று கேட்கவேண்டாம். அந்தக் காரியத்தைத் திராவிடர் கழகம் சொல்லுகிறபோது நான் சொல்லத் தேவை இல்லை அவர்களே சொல்லிக்கொண்டிருக்கட்டும். நான் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் எந்தெந்தத்துறையிலே நீங்கள் ஈடுபடுகின்ற நேரத்திலும் நித்த நித்தம் நீங்கள் அதைச் செய்யலாம். நீங்கள் அருமையாகக் காதலிக்கிற மனைவியிடத்திலே பேசுகிறபோது கூட நீங்கள் அந்தப் பிரசாரத்தை செய்யலாம். மனைவி கேட்கக்கூடும் 'அதென்ன நான் கேட்ட அந்த மங்களூர் வளையலை வாங்கித்தர வில்லையே?' என்று. 'என்ன பைத்தியக்காரப் பெண்ணாக இருக்கிறாயே, காங்கிரஸ் ஆட்சியிலே சவரன் விலை ஏறிவிட்டது. அடுத்த தேர்தல் வரட்டும். அந்த ஆட்சி தொலையட்டும். நாலு ஜதை வளையல் வாங்கிப்போடுகிறேனா'' என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் எங்காவது கடைக்குப்போய் சாமான் வாங்குகின்றீர்கள், கடைக்காரர் விலை அதிகம் என்பதை உங்களிடம் சொல்லுகிறார்; பக்கத்திலே இருக்கிற தோழர் 'நெய் இருக்கிறதா?' என்று கேட்கிறார். நெய்யை எடுத்து அவர் விரலிலே தடவி முகர்ந்துபார்த்து 'என்னய்யா நெய் நாற்றமாக இருக்கிறதே' என்று சொன்ன உடன், பக்கத்திலே இருக்கிற நீங்கள் சொல்லலாம்: 'அது என்னப்பா நெய்யா? வடக்கே இருந்துவருகிற டால்டா அல்லவா அது? வடநாட்டுக்காரன்தானே கொள்ளை அடிக்கிறான்'' என்று சொல்லலாம்.

'அப்படியா?' என்று அவர் திருப்பிக்கேட்பார். 'அது தெரிந்துதானே தி. மு. க. தேர்தலில் நிற்கிறது. இந்தத் தடவை நீ மட்டும் அதற்கு ஓட்டுப்போடு, நல்ல நெய் கிடைக்கிறதா இல்லையா, பார்' என்று நீங்கள் சொல்லலாம். ஓட்டலிலே சாப்பிடுகிற போது போடுகிற சாதம் புழுத்த அரிசியாக இருந்து நாற்றம் அடித்தால், 'என்னய்யா இப்படி புழுத்திருக்கிறதே' என்று கேட்டால், 'காங்கிரஸ் ஆட்சியில் இதைவிட நல்ல சோறு கிடைக்கும்? சாப்பிடு சாப்பிடு' என்று சொல்லலாம். பிரசாரத்திற்கு மார்க்கமா இல்லை? அந்தப் பிரசாரத்திலே உங்களால் ஈடுபடவா முடியாது? பிரசாரம் நடத்தவேண்டும் என்றால், அண்ணாத்துரை வரவேண்டும், நடராசன வரவேண்டும், கருணாநிதி வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருந்தால் எங்களுக்கெல்லாம் 'ஆண்டவன் அளித்த' உடல் ஒன்றுதானே! நாரதப் பிரம்மத்தைப் போல நினைத்தநேரத்தில் நினைத்த இடத்திற்குப் போவதற்கா முடியும்? இருக்கிற நாட்கள் குறைவு. போக வேண்டிய இடங்கள் அதிகம். எடுத்துச் சொல்லவேண்டிய விஷயங்கள் ஏராளம். ஆகையினாலே ஒவ்வொருவரும் தங்களைத் தேர்தல் காலததிலே உண்மையிலேயே பிரசாரகர்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். நம்முடைய பத்திரிகைகளிலே வருகிற புள்ளி விவரங்களை, மக்களிடத்திலே எடுத்துச் சொல்லலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு செலவழித்தார்கள்? — இரண்டாயிரம் கோடி—; தமிழ் நாட்டிற்கு எவ்வளவு செலவழித்தார்கள் — 100 கோடிக்கும் குறைவாகத்தான்; — இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு செலவழிக்கப் போகிறார்கள், ஆறாயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்கிறார்கள்;— எவ்வளவு நமக்குக் கிடைக்கும்—அமைச்சர் சுப்பிரமணியம் நானூறு கோடி கேட்டார்—நூற்றுஎழுபது கோடிதான் தருவதாகச்சொன்னார்கள்; தி. மு. க. என்ன சொல்லுகின்றது—இரண்டாயிரம் கோடி வாங்கித்தரச் சொல்லுகிறது — என்று எளிதாகப் பிரசாரம் செய்யலாமே? அப்பழுக்கற்ற விஷயமல்லவா நம்மிடத்திலே இருப்பது? எந்த எதிரியும் மறுக்கமுடியாத ஆதாரமல்லவா நமமிடத்திலே இருக்கிறது? இவ்வளவு அயன் சரக்கை விற்பதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? ஓட்டை ஒடிசலைத் தூக்கிக் கொண்டு காங்கிரஸ்காரன் விற்கப்போகிறான் — ஊசிப்போன சரக்கைப் பிறகட்சிக்காரர்கள் விற்கிறார்கள்—நல்ல அயன் சரக்கு, ஆதாரமுள்ளது, உங்களிடத்திலே கிடைத்திருக்கிற பொழுது, நீங்கள் அத்தனை பேருமே அதற்குப் போதும். ஆகையினாலே நாட்டினுடைய விடுதலையிலே நாட்டம் கொண்ட நல்ல அன்பர்கள் இன்றைய தினம்முதற்கொண்டே தேர்தல் பிரசாரத்திலே ஈடுபட்டுவிட வேண்டும். நம்முடைய புள்ளி விவரங்களையும், நாம் காட்டுகின்ற ஆதாரங்களையும் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற உரையாடல்களில், நண்பர்களிடத்திலே பழகுகின்ற நேரத்தில், அங்காடியில் உலவுகின்றநேரத்தில், நண்பர்களைச் சந்திக்கின்ற நேரத்திலே, எந்தெந்த நேரத்திலே இரண்டு தோழர்களுக்கு மேல் சந்திக்கின்றார்களோ அந்த நேரத்திலே எல்லாம்—ஒருவருக்கொருவர் அடிதடி சண்டை வந்துவிட வேண்டும் என்று சொல்லவில்லை—ஒருவருக்கொருவர் அன்பினாலே மோதிக்கொள்ளுகின்ற அளவுக்கு நீங்கள் விவாதித்துப்பார்க்கலாம். விஷயங்களை விளக்கிக்கொள்ளலாம். அந்த வகையிலே நீங்கள் தேர்தல் பிரசாரத்தைச் செய்யவேண்டும் என்று உங்களிடத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

★